உ

சிவமயம்.

ஸ்ரீஞானசம்பந்தகுரவேநம:

திருவொற்றியூர்

ஸ்ரீ மாணிக்கத்தியாகேசர்

ஸ்தௌத்யாஷ்டகம்.

ஸ்ரீதிரிபுரசுந்தரி பஞ்சரத்நம்.

ஸ்ரீ சுப்ரமணியர் பஞ்சரத்நம்.

—:o:—

இவை

ம-ள-ள-ஸ்ரீ,

குன்றத்தூர் - மாணிக்கமுதலியாரால்

இயற்றப்பட்டு.

அவரது நண்பராகிய

ம-ள-ள-ஸ்ரீ.

மணவூர் - முநிசாமிமுதலியாரால்

—:o:—

சென்னை

ஹிந்துருயல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

௧௮௮௨.

உ

சிவமயம்.

திருவொற்றியூர்

ஸ்ரீ மாணிக்கத்தியாகேசர்

ஸ்தௌத்யாஷ்டகம்.

விநாயகர்காப்பு.

நேரிசைவெண்பா.

சீர்மேவுமொற்றித்திருப்பதிவாழ்நின்றந்தை
யேர்மேவுமன்னையிளையார்மேற் - பேர்மேவும்
பாமாலைசாத்துதற்குப்பண்பார்குணலையநற்
கோமானேநீதுணைசெய்கொண்டு

ஆசிரிய விருத்தம்.

உலகுயிர்மேற்கொண்டபெருங்கருணையாலே
யோங்குருவங்கொடுகோயிலுகந்துவாழும்
நிலவணியெம்பெருமானேயாதியந்தம்
நேருயர்வொன்றில்லானேநிலவுஞ்சீர்த்தித்
திலகநுதற்பார்வதியோர்பாகங்கொண்ட
தேவனேயென்மிசைநின்றிருக்கண்வைப்பாய்
மலர்பொதுளுஞ்சோலைகள்சூழொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாலிலோனே

உ ஸ்ரீமாணிக்கத்தியாகேசர் ஸ்தோத்ராஷ்டகம்.

பத்தியிலாப்பதகனிவனென்றேயென்னைப்
பரமநீகைவிட்டாற்பரவைசூழ்ந்த
வித்தராமீதந்தோயாறுய்யுமார்க்கம்
ஏதேனும்வேறுளதோவெந்தாய்சொல்லாய்
கத்தியழுந்தேவர்தமைக்காளமுண்டு
காத்தவருட்பெருங்கடலேகொன்றையோடு
மத்தமணிந்திடுசிவனேயொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாசிலோனே

மகவின்மாட்டன்னையினுந்தொண்டர்பாலே
மல்குறுநற்கருணையுளங்கொண்டுகாக்கும்
நிகரறுபேரருளோனேமறைகளேத்தும்
நின்மலனேநித்தியனேநெடியமாலுந்
திகழுறுபங்கயத் தோனுந்தேடிக்காணாச்
சின்மயனேயென்னையாள்வாய்தேவதேவா
வகைமிகுதெங்கரம்பைகள்சூழொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாசிலோனே

எண்ணறுவெம்பிறவியெடுத்திந்நாண்மட்டும்
ஏழையேன்பட்டதுயரெந்தாய்போதும்
புண்ணியமெய்யன்பர்குழாம்வாழுமுந்தன்
பூங்கமலப்பாதநிழற்பொருந்தவைப்பாய்

கண்ணுதலேதொண்டர்கடங்குறைதீர்த்தாளுங்
கங்கைநெடுஞ்சடையானேகௌரிநேசா
வண்ணமலர்த்தடம்புடைசூழொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாசிலோனே (௪)

மார்தர்கண்மேற்கொண்டலையுமாசைதன்னின்
மதியிலேன்கோடியிலோர்பங்கேனும்முன்
பாதமிசைவைத்திடுவேனாயிலென்போற்
பாக்கியமிக்கோர்களுமிப்பாரிலுண்டோ
தீதுமிகப்பயின்றழலென்னெஞ்சையுந்தன்
திருவடியிற்சேர்த்தருளவாய்தெண்ணீர்ஞால
வாதனைதீர்த்தன்பரையாளொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாசிலோனே (ரு

தொல்லுலகின்மனைமக்கள்பெற்றார்மற்ற
சுற்றத்தார்பொன்புவியைத்துகளாயெண்ணி
யல்லணிகண்டச்சிவனேநின்றனொன்றே
யருநிதியாய்ப்பற்றவெனக்கறிவளிப்பாய்
கொல்லுழுவைத்தோலணிந்தகோலத்தோனே
கோமானேமுக்கணனே குன்றவில்லோய்
மல்லன்மிகும்பணைபலசூழொற்றியூர்வாழ்
மாணிக்கத்தியாகேசாமாசிலோனே (

தஞ்சமெனநின்னடியைநாளுந்தாழாத்
　　தலையுமுனதஞ்செழுத்தைச்சாற்றுநாவும்
விஞ்சுநலந்தருமுனதுசரிதங்கேளா
　　வீண்செவியுமுனைக்காணுவிழியுமன்னே
யஞ்சலியாக்கையுமுந்தன்கோயில்சூழா
　　வடியுமுனைநினைந்துருகாவகமுமிந்த
வஞ்சகனுக்கேனளித்தாயொற்றியூர்வாழ்
　　மாணிக்கத்தியாகேசாமாசிலோனே (எ)

காசினியிற்செல்வமிகப்பெற்றாரேனுங்
　　கண்ணனையாரேனுமுனைக்கைகூப்பாரேல்
மாசுறுமன்னோர்நட்பைமதியாதுந்தன்
　　மாணடியார்கூட்டத்தேமருவவைப்பாய்
நாசமன்றனையுதைத்தபாதாமுக்கட்
　　பகவனேபரஞ்சுடரேபத்தநேசா
வாசமலர்ச்சோலைகள்சூழொற்றியூர்வாழ்
　　மாணிக்கத்தியாகேசாமாசிலோனே (அ)

முற்றிற்று.

திருவொற்றியூர்

ஸ்ரீ திரிபுரசுந்தரி பஞ்சரத்நம்.

ஆசிரிய விருத்தம்.

கடல்புடைசூழ்வையமெலாமுய்யவந்த
காழியர்தம்பெருமாற்குக்காதல்கூர்ந்து
மிடலுறுமெய்ஞ்ஞானப்பாலன்றளித்த
வித்தகியேயம்பிகையேவிமலனன்பே
யிடனுறுபல்லுலகுமகட்டொருங்கேஈதந்த
வீஸ்வரியேயிதுததிவந்தென்னையாள்வாய்
திடமுறுபத்தர்கள்பரவுமொற்றியூர்வாழ்
திரிபுரசுந்தரியென்னுஞ்செல்வவாழ்வே (௧)

மலையரசன்றவத்துதித்தமணியேமுக்கண்
வான்கரும்பின்வாமத்தேபடருந்தெய்வ
நலமிகுநற்பசுங்கொடியேநாடற்கொண்ணா
நான்மறையினுச்சிதனினடனஞ்செய்யுந்
தலைமைபெறுங்களிமயிலேதாயேயென்றுந்
தமியேனைக்காத்தருளவாய்தரணிமங்கைத்
திலதமெனப்பொலிவுறுநலலொற்றியூர்வாழ்
திரிபுரசுந்தரியென்னுஞ்செல்வவாழ்வே (௨)

பங்கயமாதிருவருநின்னேவல்செய்யப்
பணித்தினிதின்வீற்றிருக்கும்பரையேமிக்க
துங்கநிறுதருள்வெள்ளத்தடியேன்மீதோர்
துளிபொழியிற்சாலாதோதுகளைப்போக்கி

யிங்கு ஏகத்தன்னியனாய்ப்புனிதமெய்தற்
கென்னேநீயதுபுரியாதின்னஞ்சொல்லாய்
திங்களுலாநீண்மதில் சேரொற்றியூர்வாழ்
திரிபுரசுந்தரியென்னுஞ்செல்வவாழ்வே (௩)

தந்தையினுந்தாய்மக்கண்மீதேமிக்க
தண்ணளியுள்ளாளென்பர்தாலத்துள்ளோர்
அந்தமொழிக்குன்னிடையான்பேதங்கண்டேன்
அந்தோவீததிசயமேயன்றோவெந்தன்
முந்தையவல்வினைவலியோவன்றென்முக்கண்
முன்னவனார்கட்டளையோமொழியாயன்னே
சிந்தனைசெய்பவர்க்கருளுமொற்றியூர்வாழ்
திரிபுரசுந்தரியென்னுஞ்செல்வவாழ்வே (௪)

உள்ளத்தேயன்பணுவுமுளனல்லேன்
உன்னடியைத்தொழுதறியேனோர்காலத்தும்
எள்ளளவேனுந்தருமமியன்றமட்டில்
எண்ணிலேன்செய்திடவேயென்றாலந்தோ
விள்ளருநற்கதியதனைப்பெறுமாறேதோ
விளம்புவாய்மெய்யருள்கொண்மேனியாளே
தெள்ளியஞானத்தவர்சேரொற்றியூர்வாழ்
திரிபுரசுந்தரியென்னுஞ்செலவவாழ்வே (௫)

முற்றிற்று

திருவொற்றியூர்

ஸ்ரீசுப்ரமணியர் பஞ்சரத்நம்.

ஆசிரியவிருத்தம்

ஓரோங்குமம்பிகையாண்மகிழுஞ்செல்வச்
செம்மலேபிரசமிகுந்தேங்கடப்பந்
தாரோங்குமார்பகனேயன்பருளத்
தாமரையேகோயிலெனச்சததம்வைகும்
ஏரோங்குமேனியனேயெல்லாம்வல்ல
வெந்தையேயருண்முகிலேயென்னையாள்வாய்
ஊரோங்குபல்வளனுமொருங்கேபெற்ற
ஒற்றிநகர்ச்சண்முகனேயும்பர்கோனே (க)

மெய்யடியார்வேட்டவெலாம்விருப்பினல்கு
மேதகுநற்கற்பகமேவேதத்தோங்கும்
துய்யபரம்பொருளேவிட்டோவாஜீவத்
துணையேவெஞ்சனனமெனுந்தொல்கடற்கோர்
செய்யநலப்பெரும்புணையேயுள்ளத்தென்றுந்
தெவிட்டாததெள்ளமுதேதேனேபாகே
உய்யவெனக்கோர்நெறியைக்காட்டியாள்வாய்
ஒற்றிநகர்ச்சண்முகனேயும்பர்கோனே (உ)

பூதலத்திற்சாணகட்டைவளர்ப்பான்வேண்டிப்
புல்லியர்தங்குற்றேவற்புரிவேனல்லான்
மாதவர்களவந்திக்குமுந்தன்சீத
மலர்க்கழலையொருபோதுமனத்துமுள்ளேன்

ஏதமிகுமென்னையருட்கண்ணுேக்கி
யீடேற்றவேண்டுவதுன்கடனேயெந்தாய்
ஓதமடங்குறவடியார்துதிமிகவோங்கும்
ஒற்றிநகர்ச்சண்முகனேயும்பர்கோனே (௩)

தண்ணுளத்தம்புயமேல்வாசனுக்குந்
தாரகமெய்ப்பொருடந்தோயாயிரஞ்சூழ்
கண்ணுனுக்கடலசுரர்பயத்தைத்தீர்த்துக்
கற்பகநாடளித்தருள்செய்கருணையோனே
பண்ணுஞ்சொல்வள்ளிதெய்வயானைப்
பாகத்தோயென்னைகடைக்கண்பார்பன்னற
கொண்ணுதபெரும்புகழுக்குறையுளாகும்
ஒற்றிநகர்ச்சண்முகனேயும்பர்கோனே (௪)

ண்டமணப்புல்லர்குழாந்தன்னைவென்று
பத்திமைசேர்சைவத்தைப்பரிபாலித்த
ண்டிறலோயிந்நாளிற்பிரமந்தாமே
தெய்வமேதின்றெனவுஞ்செருக்கிப்பேசுந்
ண்டகரைச்சீர்படுத்தியடிமைகொள்வான்
கருணையுளத்துனக்கிலையோகழறுயோதம
ண்டிரையாங்கரங்கொடுநன்மலர்தாய்வாழ்த்தும்
ஒற்றிநகர்ச்சணமுகனேயும்பர்கோனே (௫)

முற்றிற்று.

கணபதி துணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

பழமலையந்தாதி.

திருத்தணிகைக்

கந்தப்பையர்

செய்த பதவுரையுடன்

புதுவை - சுப்பு

அருணாசலகுருக்களவர்களது

லக்ஷ்மீவிலாஸசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

௵ அக்ஷய ஆகஸ்டு மீ

சென்னை

சந்த்ரமௌலிப்ரஸ்.

ரிஜிஸ்டர்காபி.

கணபதி துணை.

பழமலையந்தாதி

பதவுரை.

காப்பு.

சீரதங்கோட்டு முனிகேட்ட நூறபடி செங்கரும்பா
லேரதங்கோட்டு வயல்சூழ்முதுகுன் றிறையவனைப
பூரதங்கோட்டு மலையானைப்பாடப் புரந்தருளும்
பாரதங்கோட்டு நதியாலெழுதிய பண்ணவனே.

இதன்பொருள்.

சீர் - சீர்த்திபெறற—அதஙகோட்டுமுனி - அதஙகோட்டு மாமுனிவன்—கேட்ட நூறபடி-கேளவிபபட்டுலகத்து விளங்குந் தொல்காபபிய விலககணபபடியே—செங்கரும்பால் - பள்ளருழுமபோது சிவந்தகரும்பாகிய தாறறுககோலினால்—ஏரது - உழும்பகடானதை—அங்கு - அநதப பூமியினிடத்தில்—ஓட்டும் - அடித்து நடத்தாநின்ற—வயல்சூழ்-கழனிகள் புடைவளைநத—முதுகுன்றிறையவனை - பழமலையென்னுந் தலத்தில்வாழுங் கருத்தனை—பூரதம் - பூமியாகிய விரதத்தையும்—கோட்டுமலையானை-வில்லாகவளைத்த மேருமலையையு முடையவனை—பாட - யான் றமிழினாலே பாடு

தந்து—புரந்தருளும் - இடையூறுவாராமற் காத்து ரட்சிக்கும்—பாரதம் - ஐந்தாமறையென்னும் பாரதக்கதையை—கோட்டு நுதியால் - தனது கொம்பு நுனியாகிய வெழுத்தாணிக்கூரினாலே—எழுதிய பணவனே - மேருகிரியென்னு மேட்டிற் சிலாசாதனமாக வெழுதிவைத்த தெய்வம்—என்றவாறு.

கோட்டு நுதியா லெழுதியவென்னும் வினையால் கணபதியென்பதாயிற்று. செங்கரும்பாமோர் சங்கோட்டென்னவே உழுவை வருவிக்கப்பட்டது. இஃது - விராயசந்துதி.

—— ௫ ——

திருவருந் தங்க வருங்கலிமாற்றுஞ் சிறப்புவருங்
கருவருந் தங்க நிலையாதென வுளங் கனாந்துறைந்திற்
பொருவருந் தங்க மலைபோலுங் குன்றைப் புராதனனை
யிருவருந் தங்க டலையாலிறைஞ்சு மிறைவனையே.

இ-ள். திருத்தங்கவரும் - ஸ்ரீதேவியுந் தங்கியிருக்கும்படி வாராநின்றவள்—தங்கவருங்கலிமாற்று - கலைவாணியுந் தங்கியிருக்கும்படி குடியாகவந்துசேர்வாள்—சிறப்புதங்கவரும்-எல்லாருமெண்ணங்கத்தக்கவிசேடமானமேன்மைகளெல்லாமுவந்துசேரும் - கரு - கரு பாசயத்தில—வருந்து—துன்பத்தையடைந்துபிறக்கும்—அங்கம்-உடம்பு—நிலையாதென்று—நிலையல்லவென்று ஞானாசிரியர் விசாரித்துத் தெரிந்து—உளம்—மனது—கனாத்தும் - அனாதியாய் வலிமைகெட்டு உருகி நீராய்க்குழை

ந்து—இறைஞ்சில்-வணங்கினால்—பொருவரும்-நிகரில்லாது பூலோகத்தி லுயர்ந்த—தங்கமலைபோலும் - மேருகிரியைப போலும் பொன்னிறம்படைத்த—குனறைபபுராதனனை-ப ழமலைநாதனை—இருவரும் - தனனோடு கூட்டி மூவரொன்று புகலுங் கணககிற றன்னைநீகக விருவரொனறு சொலலுங் கணககுபபெற்ற வரிபிரமர்கள—தஙகடலையால் - தமது சி ரங்களால்—இறைஞ்சும் - பணிந்த—இறைவனையே - கருத் தனை—எ-று.

தங்கவென்பதை - இருதங்கவருங் கலைமாது தங்கவருஞ் சிறப்புதங்கவரும எனத் தனித்தனிகூட்டி இடைநிலைதீப மாககுக. இறைவனை இறைஞ்சில் - திருவரும கலைமாதுவ ரும சிறபபுவருமெனககொளக. (க)

இறைக்குவளையு மிளங்கிள்ளையுமழ கெனபவாசோ
துறைககுவளையு மெகினமும்வாவிககுத் தூயவிசழ்
நறைககுவளையு மழகாமுதுகிரி நாதாகனறிப
பிறைககுவளையு முடலவநதவாறெனகொல் பேசகவே.

இ-ள். இறைச்கழகு - கைக்கழகு—வளையும் - வளையு லும்—இளஙகிளளையும - இளமையாகிய கிளிடபிளளையும— என்பவா-என்றுசொல்லபபட்ட மகளிா—சோ - நீாவிளையா டாநின்ற வாயங்குலவிய—துறைககு - மணிமு ? ... தது றைகளுக்கு—அழகாம் - அழகாகும—வளையும- வளையாகிய சஙகும—எகினமும் - எகினமாகிய வன்னமும்—வாவிக்கழ

காம்-தடாகங்களுககழகாகும—தூயவிதழ் - தூய்மையாகிய மடலுடைய—நறை-தேன்பொருந்திய—குவளையும்- செங்க ழுநீருமாகச் சூழ்ந்த—முதுகிரிநாதர்க்கு - முதுகிரிநாதனுக கு—இன்று-இத்தெருவிற்பவனிவருமின்றையத்தினமும்— இபபிறைக்கு - இவர் முடிமீதணிந்த விந்த மூன்றாமபிறைக் கு—வளையுமுடல் - கூனியஉடலம்—வந்தவாறென்-வந்தகா ரணமென்னை—பேசுகநீ - சொல்கவெனப பவனிகாணவந்த மகளிரி லொருவளாயொருவர் வினவினார்—எ-று.

இறையென்பது - கைவிரலிற்கீற்று கீற்றையுடையவங் குலிசெறிந்த கையென ருகுபெயராகக்கொள்க. கொல்லென் ப தசைநிலையெனினுமையமெனினுமொகக்கும். அழகாமென் பது கடைநிலைத்தீபம். (உ)

பேசுகவீர வருநாளென்றொல்லைப பெருங்கடல்சே
ராசுகவீர பழமலைவாணவென் றன்பனாந்து
பூசுகவீர மதிவேணிநீறறைப் புலவிரபிறா
காசுகவீர வனையுகவீர்மெய்க கதிதருமே.

இ-ள. ஈர - வாளினுலரிய—வருநாள் - இயமன்வரு நாள்—ஒலலையென்று - ஒலலையாகிய சீககிரமென்றுவிசாரித் து—பேசுக - பேசுமின்கள்—பெருங்கடல் - பெரியதிருப்பா ற்கடலாகிய தாணியில்—சேர் - சேர்ந்திருந்த—ஆசுக-விண் டுவாகிய பாணத்தையுடைய—வீர-சேவகனே—பழமலைவா ண-முதுகுன்றில் வாழ்பவனே—என்று-இப்படிதோத்திரம்

பண்ணி—அன்பு - ஆசையை—அளைந்து - கலந்துநின்று—
ஈரம்-குளிர்ந்த—மதி-பிறைமதியை—வேணி - சடையிலணி
பவனது—நீறதை - திருநீற்றை—பூசுக - தரித்திடுமின்—
புலவிர் - நல்லறிவுடையவர்களே யிவ்விரண்டு செயலையுஞ்
செய்வீராகில்—பிறர் - இந்த முதுகிரியானுக் கன்பில்லாரை
வருத்தும்—காசு - குற்றமான தீவினை—கல்லீர்-கல்லித்தின்
னுமபடி யந்தத்தீவினைவாயி லகப்படீர்—அவனையுகவீர்-ஆ
சையாலந்தப் பழமலைநாதனையுகந்து பூசித்து மகிழ்ச்சியைய
டைவீராகில்—மெய்க்கதிதரும் - அவனுங்களுக்குண்மையா
கிய பேரின்பத்தைக்கொடுப்பன்—எ-று.

உடலை யீரவ்வருத்தலியமனுதலி னியமனையும் வாளினையும்வ
ருவிக்கப்பட்டது எனவே - புலவீருமதுடலையியமன் வாளி
னலரியவொல்லைவருநாளிது பொழுதேயென்றறிந் தவனைப்
பேசி யவனது சாதனமான பூதியைபூசி யவனைமகிழ்ந்துவி
னைபயீராகில் உலகத்தாரைவருத்துங் காசுகவ்வும்படி யகப்ப
டீ ரவன்றரும் மெய்க்கதியும் பெறுவீரென்றாராயிற்று. பி
றர்காசு பிறர்பொருளை உகவீர் விரும்பீராயவனைமாத்திர மு
கந்துதிரிவீராகி லெனினுமமையும். (௬)

கதியிலைவேலை மடவாரகியற்றக கருதுளமே
பொதியிலைவேலையுண் டேறேறன்றெழும்பழம்பூதரத்தை
நதியிலைவேலை மகிழ்வீரன்றன்னதலைய நோக்கிலைநீ
யொதியிலைவேலை வளர்பபாயதருவை யொடித்தெறிந்தே.

இ-ள். வேலை - ஏவற் பணிவிடையை—மடவார்க்கு- பேதையராகிய மாதர்களுக்கு—இயற்ற - செய்யவேண்டி—கருதும - நினைக்கும்—உளமே-எனது நெஞ்சமே—கதியிலே-உனக்கொருநாளுங் கதியில்லை—வேலை - சமுத்திரநீரை—உண்டு - ஆபோசனம்பண்ணி—பொதியிலையுற்றோன் - பொதியமலையை யிடமாகக்கொண்டு வாசமாயிருக்குங் குறுமுனிவன்—தொழும்பழம்பூதரத்தை - வணங்கித்துதிக்கும் விருத்தகிரிவடிவான சிவனை—நதி - நதியில்—இலை - தகட்டுவடிவான—வேலை - வேலாயுதத்தை—மகிழ் - மகிழ்ந்து கரத்திலேந்தும—வீரனை - முழுச் சேவகனாகிய முருகனைது—தந்தையை - பிதாவை—நோக்கிலை - நீ தரிசனஞ்செய்தாயில்லை யாகையா லுனதுசெய்கை யெத்தன்மையவா யிருந்ததென்னில்—தருவை - கேட்டதைக்கொடுக்குங் கற்பகத்தருவை—ஒடித்தெறிந்து - முறித்தெறிந்து—ஒதி - கோடைகாலத்தில் வெய்யிற்குத்தங்க நிழலில்லாத விலையுதிர்ந்த வொதியமரத்தையும்—இலைவேலை - சேர்ந்தாளாக சொல்லு முளையுடைய விலைசெறிந்த வேலமரத்தையும்—வளர்ப்பாய் - பயிராக்குகின்றனை போலுகின்றாய்—எ-று.

வேலையையுண்டு பொதியிலையுற்றோனெனக் கூட்டுக.
உ-தி - ஒதியெனமருவிற்று. (௪)

ஒடியமருங்குலைக் கொங்கைகள்வாட்டுறு மோடரிக்கட்
டொடியமருங்குலைக் காந்தளங்கைம்மகள் சேரமதன்

கடியமருங்குலைத் தீபோன்மதியங் கனன்றெழுத
லடியமருங்குலைச் செய்ம்முதுகுன்றாக கறைகுவமே.

இ-ள். ஒடிய - ஒடிந்துபோக—மருங்குலை - இடை யை—கொங்கைகள் - தனபாரங்கள—வாட்டுறும்- பருந்து வருத்துதலைச் செய்யும்—ஓடு - நீளச்செலலுகின்ற—அரி - செவ்வரிபரநத—கண் - கண்களையும்—தொடியமரும்- வளை யல்பொருந்திய—குலைககாநதள் - கொத்தாகிய காந்தட்பூப போலும்—அம் - அழகிய—கை - கைவிரலகளையுடைய— மகள் - நமமுடையபுதல்வி—சோர - உயிர் சோரும்படி— மதன் - மனமதன்—கடிய - கோபிகக—மருஙகு - பககஙக ளில்—உலை - கொல்லனுலையிலெழுநத—தீபோல் - அக் கினிகொழுநதுபோல—மதியம் - சநதிரன—கனன்று-கொ தித்து—எழுதல் - எழுதலை—அடியம் - அடியேங்களா—அ ரும் - அருமையான—குலை- குலலையாகிய வெட்சிப்பூபோ ல—செய் - சிவநதநிறத்தைதக காட்டபபட்ட திருமேனியை யுடைய—முதுகுன்றாககு - பழமலைநாதாககு—அறைகுவ ம - சொல்லுவோம்—எ-று.

இது-நற்றாயிரஙகல். (௫)

மேருக்குவடு சிகாதோட்பழமலை மேவுதிருத்
தே●க்குவடு வசமாடுமாடத் தெருவினிறபோய்
நீருக்குவடு விழியெழினமாய்நதெதிா கின்றுநம
●ருககுவடு விளைத்தனளோயின் றெழிவறவே.

2

இ-ள். உவள் - நமதுபெண்ணாகிய விவள்—துவசமாடு - சிறுகொடிக ளசையாநின்ற—மாடம் - மாளிகைசெறிந்த—தெருவினிற்போய் - தெருவீதியிலேநடந்துபோய்—வடுவிழி - மாவடுவகிர்ந்தன்ன கண்களினின்றும்—நீருக்கு - நீர்பெருகவுதிரத்து—எழின்மாய்ந்து - அழகழிந்து—மேருக்கு வடுகிகா - மேருகிரிபோன்ற—தோள் - புயங்களையுடைய—பழமலை - பழமலைநாதர்—மேவும்-எழுந்தருளி வராநின்ற—திருத்தேருக்கு - அழகியரதத்துக்கு—எதிர்நின்று - எதிரேநின்று பழமலையார்மேல் மயக்கமடைந்து—இன்று - இற்றைப்பொழுது—நமதூருக்கு - நமமுடையநகரத்துள்ள மடநதையர்க்கு—ஒழிவற - எக்காலுந் தீராதபடிக்கு—வடு - குற்றமாகிய பழிச்சொல்லை—விளைத்தனள் - உண்டாக்கினாள்—எ-று.

உவள் - தெருவினிற்போய் வடுவிழிநீருக்கு எழின்மாய்ந்து பழமலையாாமேவுந் திருத்தேருக்கெதிர்நின்று நமதூருக்கு வடுவிளைத்தனளெனக்கூட்டுக. (சு)

ஒழியாக்கவலை யொழிவதென்றோசொல் லுழல்புலத்தின்
வழியாக்கவலை யிடைப்படுமானின் மயங்கிநின்று
பழியாக்கவலை மனமேபணிந்து பரவிலைவேல்
விழியாக்கவலை மகளிறைதாழ்பழ வெற்பினையே.

இ-ள். மனமே - நெஞ்சே—வேல்விழி-வேல்போன்ற கண்களையுடைய—ஆக்கம - செல்வத்தையுடைய—அலைமக

ளிறை - மகாலட்சுமிக்கு நாயகனாகிய விஷ்ணு—தாழ் - சே விக்கப்பட்ட—பழவெற்பினை - முதுகுன்றினை—பணிந்து - வணங்கி—பரவிலை-தோத்திரஞ் செய்தாயில்லை—வலையிடைப்படுமானின் - வலையின்கண்ணகப்பட்ட மானைப்போல—மயங்குகின்று-மயக்கமடைந்து நின்று—உழல - சுழன்றுதிரியும்—புலத்தின்வழி - ஐம்புலவழியிலே—ஆக்க - என்னைக்கட்டிப்போட்ட—பழியாக்கவலை - பழியுண்டாக்க வல்லாய்—ஒழியாக்கவலை - ஒருக்காலுநீங்காத விசனத்தை—ஒழிவது-நாம் நீங்குவது—என்றோ - எந்தநாளோ—சொல் - நீ சொல்வாயாக. எ-று.

பழியாக்கவலையு மனமேயெனினும் வல்லமனமேயெனினும் பொருந்தும். மனமே-பழமலையைப்பணிந்து பரவிலை வலைபபடுமானின் மயஙகுகின்றுழல புலத்தின்வழியாகக பழியாக்கவலை யொழியாக்கவலை யொழிவதென்றோ சொலலெனக்கூட்டுக. (எ)

வெற்றிக்குமாரனை யீன்றபழமலை வேந்தனின்று
முற்றிக்குமாரனைநோககுஙகொலோவென்யாழலைவம்புசு
சொற்றிக்குமாரனைவாராமடவாரவனைறேணமுலையோ
டொற்றிககுமாரனை யோன்முனஞ்சேரவுழலுவரே.

இ-ள். மடவார் - பெணகள்—வெற்றி - ஜெயம்பொருந்திய—குமாரனை - முருகவேளை—ஈனும் - புதல்வனாகப்பெற்ற—பழமலைவேந்தனை - முதுகுன்றுககிறைவனாகிய - சுவா

மி — இன்னும் - இனிப்பொருக்கு னமது பொருட்டு — மூன்று -
மூதிரந்த — இசுகு - இசைந்த கரும்புவில்லை யுடைய — மார
னை - மன்மதனைவெந்துவிழும்படி — நோக்குங்கண்ணாலோ - பா
ர்ப்பாரோ — என்பர் - என்றுசொல்லுவர் — ஒலிவம்புச்சொ
ல் - அந்தரங்கத்திலே ரகசியமாபேசின புதுமையான கள
வொழுக்கவார்த்தை — திக்குமார - எட்டுத்திக்கிலும்பரவ —
தைவார - அதுகேட்டு வாடிப்போவார — அவன்றான் - அந
தப் பழமலைநாதனது புயங்கள் — மலையோடு-சந்தனபார
ங்களுடன் — ஒற்றிக்குமார - அவனையும்பொருட்டு — அவனையோ
ன்றுமே - அந்த விருத்தகிரியிலிட்ட திருமுன்னே — சேர-
செலுத்தற்கு — உழலுவனோ - உழன்றுதிரிவ — எ-று.

வம்புச்சொல் - நிசசொல், மூலைபெண்டலைந் தோணக்
திசையாக்கி திக்கெனப்பல்பய பெருந்திசையென்று கொண்டு
வம்புச்சொல் தோணத்திசையிலும் பெருந்திசையிலு நிறை
யமட்டவாரா னைவாரொனினு மமையும், மாரீறு எதிர்காலங்கா
ட்டும் பொருட்டெனனும் வினையெச்சமாய்நின்றது. இஃது
வீதிமட்டவார் விரசங்கூறியது (௮)

ப ழவணாச்சந்த விராவாளைபாய்வய லொங்குகுணைறக
கிழவணாச்சந்த தருங்கிளைவாய்நற கிளைவாரும்
பழவணாசசந்த நறுங்கழைவாங்கிப் பரவினடு
ளுழ்வணாச்சந்த மயிலியல்பூசவு மெண்ணினளே.

இ-ள் உழுவரை - பள்ளரை—சுந்தம - அழகிய—இள வாளை - இளம்பருவத்தையுடைய வாளைகள—பாய் - பாய்ந்து திரியப்பட்ட—வயல்-கழனிகள்—ஓங்கும்-வளர்ந்து விளையப்பட்ட மருதஞ்சூழ்ந்த—குன்றைக்கிழவனை - குன்றுகளுக்கெல்லா முரியவராகிய சிலம்பனை—சந்தமுன்னினைவாய்- எப்போது நினைக்கப்பட்ட மனமுடையவளாய—நறகிளைவளரும - நல்லமூங்கில் வளராநின்ற—பழுவனா-பழமலையினின்றும—சந்தநறுந்தழை - நீகொய்துவந்த வாசனைபொருந்திய சந்தனத்தழையை—வாங்கி - என்கையினின்றுந் தன்கையிலேற்று—பரவினள - வணங்கித்துதித்தாள—அந்தமயிலியல்-அந்தமயில்போன்றசாயலையுடையாள்—தாளொடு-அதுதுகளொழுமபடி—அரைச்சு - அரைத்து—பூசவும-மெய்யெலா ம பூசிக்கொள்ளவும்—எண்ணினன-நினைந்தாள —எ-று.

இது தலைவி கையுறையேற்றமை பாங்கி தலைவற்குரைத்தல். (௯)

எண்ணிவருந்தினநொந்தோம்பழமலை யெய்திலர்கா
னண்ணிவருந்தின மின்றேபிணிக்கதிர் நறபுரவி
மண்ணிவருந்தின மாவாலெழுந்துகள வந்துடலின்
கண்ணிவருந்தின வானமதிரேயகருங் கடுங்கரோ.

இ-ள. (பெண்ணே) எண்ணி - மனதிலே [illegible]ொன்று வருவரோவென்று நினைத்து—வருந்தினம - வ[illegible]ப்பட்டோம்—நொந்தோம் - விரகநோய்கொண்டோம்—[illegible]மலை-

பழமலையிலே—எய்து - பொருந்தும்—இல் - இல்லமாகி ய வீடுடைய நம்மிறைவர்—கானம் - காட்டுவழியே பொருந்தி—வருநதினம் - வருகின்ற தினம்—இன்றே - இப்பொழுதே யென்று நீயறிவாயாக (விதற்கேது வெனா னென்று கேட்பாயாகில்) இனி - இப்பொழுதிதோபார— கதிர்நற்புரவி - சூரியனுடைய நல்லபுரவியானது—மண - மண்ணுலகில்—இவர் - இரதநாயகா—உந்தின - செலுத் தப்பட்ட—மாவால் - குதிரைக குளம்பால்—எழும் - எழு ந்த—துகள - தூளிகள்—வந்து - ஆகாயத்திற சென்று— உடலின்கண் - சரீரத்தினிடததிலே—இவரும் - எறிய—தி னவால் - கண்டூதியால்—கடிநகா-நமது காவலையுடைய நகரி டத்து—மதில் - வானளாவிய மதிறபுறத்திலே—தேய்க்கும்- உரஞ்சிகொளளுமா—எ-று.

இது பாஙகி தலைமகன்வரவு தலைவிக்குணர்த்தியது. தோ ன்றுவெழுவாயாதலிற பெண்ணேயென முதற்கண டலைம களை வருவிக்கபபட்டது. (கO)

கடிக்கஞ்சமனை யுவந்துலகாக்குறுங் காரணனோர்
முடிக்கஞசமனை தொறுமபலியேறற முதுகிரியான்
மிடிககஞசமனை வருந்தொழவாழ்வம் விரவுமெங
குடிக்கஞசமனை வெருவுதலையினறு கொல்வனென்றே.

இ[illegible] கடிககஞ்சமன் - வாசனைபொருந்திய தாமரைப் பூவின்[illegible]யுற்ற, ஐ - சுவாமியாகி, உவந்து - விருப்பத்தோ

டு, உலகாக்குறுங்காரணன் - உலகத்தைச் சிருஷ்டிக்கு மேதுவான படைப்புத்தொழிலை யுடையுவனது, ஓர்முடி - ஒர் தலையாகிய, கஞ்சம் - வெண்கலப்பாத்திரத்திலே, மனைதொறும் - (தாருகாவனத்து முனிவர்பத்தினிகள்) வீடுதோறுஞ் சென்று, பலியேற்ற - பிச்சையேறகும், முதுகிரியான் - பழமலையுருவானவ னருளால, மிடிககஞ்சம - (யாமென்றுந்) தரித்திரத்துக்குப் பயப்படோம், அனைவருந்தொழவாழ்வும் - எவ்வுலகததவரும் வணங்கவாழ்வோம், விரவுறும்-கலந்துறவாகிய, எங்குடிககு - எமது குலத்துளளாாக்கும், அம் - அழகிய, சமனை - இயமனுககு, கொல்வனென்றே-கொல்லவருவானென்று, வெருவுதலேயின்று - எபபோதும் பயமேயிலலை—எ-று.

முதுகிரியானெனவே-பழமலையாரருளாலென வருளைவருவித்துரைக்கபபட்டது. இயமன்கொல்வானென்னும்பயமெமதுகுடியிலுள்ளாாககு மிலலையெனக்கூட்டுக. சமனை-சமனுககு என்னும் குப்பொருளைவிளககி இரண்டாம்வேற்றுமையென மயங்கின்றது. அறிவுடையந் தணனவனைக் காட்டென்றாற் போலவென்க. முதுகிரியானருளைப்பெற்றோரியமனைவெல்வரென்பது திண்ணமாதலறிக. இதனுள் முடிககஞ்சந்தலையோடாகிய வெண்கலப்பாத்திரம் - [illegible] முசமென்னும் வடபதங் கஞ்சமெனத்திரிந் துண்கலம[illegible]பொருடந்துநின்றது. (கக)

கொல்லைக்குறவனை வாயனையார்கரிக் கோட்டைவிளை
நெல்லைகுறவனை யாதுகொள்காளத்தி நேயனைவான
றில்லைக்குறவனை நமமுதுகுன்றனைச் சேர்வலென்றா
ரெல்லைகுறவனை மாத்திரைககேநல மீகுவரோ.

இ-ள். கொல்லைக்குறவனை - கொல்லைகளையுடைய (முல்லையில் வேட்டமாடாநின்ற) குறவனை—வாய் - (தமது கணவராக) வாயந்த—அனையார - அந்தவேடமஙகையா—கரிககோட்டை - யானைகொம்புகளை—விளைநெல்லை - மலைச்சாரலிலே பயிரிட்ட ஐவனமுதலிய தானியததை—குற - குறறுதறகு—வரையாதுகொள் - தளளிபபோடாமல் திருககாளத்தி மலையிலேவநது வாஙகிககொணடு போகாநினற—காளத்திநேயனை - காளத்தியென்னுந தெனகைலையிலேநேசமாயிருபபவனை—வான்றில்லைககு - ஆகாயமாகிய சிதமபரமெனனுந தலத்துககு—உறவனை - உறவாயிருப்பவனை—நமமுதுகுன்றனை - நமதுபழமலைநாதனை—சோவலென்று - சென்று தரிசிபபேனெனறு—ஊரெல்லைககுற - அந்தவிருத்தாசலமென்னு மகாதலத்தினுடைய வெல்லைககுளளே யாவருகினுமொருவன் சென்றுபொருந்த வவனுககு—அரைமாத்திரைககே - அரைநொடி யளவுக்குள்ளேதானே—நலமீகுவரோ—பழமலைநாதர் நன்மையைக கொடுப்பா—எ-று.

குறவனை வாயனையார் என்பதற்கு - குறவனைத் தெய்வமாக[illegible]ம வாய்மையையுடைய அனையாரெனினு மொக

கும், அன்றிக் குறவர்குலத்திற்றோன்றிய ஐவாய்-அழகியவா யையுடைய வங்கல்லாரொனிலுமணமையும். வளையாது கொள ளுதல் காிகோடு அரியபொருளன்மையின் விலைகொடுத்து வாங்காது கொள்ளுவரென்பது மொருபொருள், ஐவாயனை யார் நெல்லைக்குற்ற காிகோட்டைக்குறவா வளையாதுகொ ள்ளுங் காளத்திமலையென்றுமாம். (௧௨)

ஈகையிலங்கை தவமுளமெங்ஙன மெய்துவமென்
ேறைகையிலங்கைவடிவேலொடுவருந் தோன்றறந்தை
வாகையிலங்கை யரசிறவூன்றிய வள்ளன்மழு
மாகையிலங்கைம் முகமுதுகுன்றன் மலர்ப்பதமே.

இ-ள். ஈகையிலம்-யாமொருவர்க்கு மொருபொருளைக் கொடுத்தறியேம்—கைதவமுளம்- வஞ்சனையையுடையோம் மென்றேகையில் - மிருதுவானதூவியையுடையமயிலேறி— அங்கைவடிவேலொடு - குடங்கையேந்திய வடித்தவேலாயுத த்தோடு—வரும்-அடியாாினைகரும்பொழு தோடிவரும்— தோன்றறந்தை-முருகனுடைய பிதாவானவா—வாகை-திக் குவிசயம்பண்ணிவெற்றிமாலையையணிந்த—இலங்கையரசு- கைலாயமலையெடுத்த விலங்கை மன்னவனை ராவணன்— இற - முதுகுதண்டிற்றுவிழ—ஊன்றிய - காற்பெருவிரலா லிருத்திய—வள்ளல் - தியாகியானவர்—மழு - பரசு—மா - சாரங்கம்—கையிலங்கு - கரத்திற் பிரகாசிக்கும்—ஐம்முக முதுகுன்றன்-ஐந்துவதனத்தையுடையபழமலைநா[illegible]து—

மலர்ப்பதம் - பாதாரவிந்தத்தை—எங்ஙனமெய்துவம - நா மெப்படி யடையக்கடவோம்—எ-று.

முதுகுன்றா மலர்ப்பத மெங்ஙனமெய்துவமெனக் கூட்டுக. மாகை-பெருமைதங்கிய கையெனினுமமையும். ஊன்றியெனவே-பெருவிரல்வருவிக்கப்பட்டது. அந்தராவணன் சாமகீதத்துக்கிரங்கி மீட்டும் வேண்டியவரங்கொடுத்தலின் ஊன்றியவள்ளலென்றார். அகங்கை-அங்கையெனமருவிற்று.

பதம்பரவைக்கு வருந்துபிராற்குப பசுமயின்மேற்
கதம்பரவைக்கு வரச்சுற்றுகட்செவிக் கங்கணற்குச்
சிதம்பரவைக்கு முதுகுனறவாணற்குச் செல்வமெல்லா
மதம்பரவைககு நிகாகரித்தோறலை மாலைகளே.

இ-ள். பரவைக்கு - பரவைநாச்சியாருக்குத் தூதுநடந்து—பதம்-திருவடிகள்—வருந்தும் - வருந்தின—பிராற்கு - எமது கருத்தனுக்கு—பசுமயின்மேற்கதம்பர் - பசியநிறம்படைத்த மயிலின்மேலேறிக்கொண்டு கதம்பப்பொடி பூசிய கந்தசுவாமியார்—அவைக்குவர-தனது சன்னிதானத்துக்கெழுந்தருளக்கண்டு நடுங்கிய சேடனும் வாசுகியும—சுற்று-தனது வரதாபயத்தைச் செயயுந் திருக்கரங்களிலேவளைந்துடலொடுங்கிச் சுற்றிக்கொண்டதுபோலும்விளங்காநின்ற—கட்செவிக்கங்கணற்கு - கண்ணே செவியாகிய வரவக்காப்பையணிந்தவனுக்கு—சிதமபரவைக்கு - சிதம்பரமென்னுந் தில்லை[illegible]ககு ஐயாகிய சுவாமிக்கு—முதுகுன்ற வாணற்

கு - பழமலையின்கண் வாழாநின்றவனுக்கு—செல்வமெல்லாம்-ஐசுவரியமெல்லாம (உறறுபயார்க்குமிடத்தில்)—மதமதானநீரானது—பரவைக்குநிகர் - கடனீரப்பெருக்கத்துக்குநிகராகிய—கரித்தோல்-யானைத்தோலும்—தலைமாலைகளே-சிரமாலைகளுமே வேறில்லை—எ-று.

பதம்வருநதும் பிராணெனககூட்டுக. முதுகுன்றர்மேலிச்சைகொண்ட புதல்வியைப்பார்த்து நற்றாய நீயிந்தசசெலவத்துககோ விசசித்தாயென்றுரைத்தது. (௧௬)

மாலைக்கலுழ னொய்யோனெனத்தாங்க வயங்குமரு
நூலைககலுழ வொழியெனுமேறறிவர் நோனமையனாழ
பாலைக்கலுழ வொருமகற்கீந்த பழமலையான
மூலைககலுழ நடம்புரிவானெம் முதற்றெயவமே.

இ-ள். மாலை - மாயவனை, கலுழன - புள்ளரசனானவன், நொய்யோனென - கனமில்லாதவனென்றுலகததாா சொல்ல, தாங்க - சுமககவும், வயங்கும - அறிவைபபிரகாசிக்கபபண்ணும, அருநூலை - அருநூலாகிய சிவாகமத்தை, கல் - கறறுககொள், உழவு - ஐமபுலனிலுமுழலு முன்னுடைய வுழைப்பபை, ஒழியெனும் - ஒழியெனறு தன சீடனுககுபதேசம்பண்ணும், ஏறறிவர் - இடபவாகனததின் மேலேறும, நோன்மையன் - மிகுந்தகனம்பொருந்தினவன், ஆழ்பாலை - ஆழும்பொருந்திய பாறகடலை, கலுழ - அழ, ஒருமகறகு - ஒருகுழவியாகிய வுபமனனியபகவானுக்கு, ஈந்த-கொ

டுத்தருளின, [illegible]ழமலையான்- விருத்தகிரி வடிவானவன், ஞால கு - எண்டிசைகளும்போய, அல் - சர்வசங்காரஞ்செய்த பின்னுண்டாகிய நள்ளிருளை, உழ - தமது திருமேனிபபிரகாச முழுதுகொண்டுபோக, நடம்புரிவான் - நடனஞ்செய்வன், எம் - எமது, முதற்றெய்வமே - முதன்மையான கடவுளவனே—எ-று.

கலுழன மாலை நொய்யோ னெனத்தாங்க வெனக்கூட்டுக. ஞாலககலுழ-திககுகளுக்கெல்லா மிருள்நீங்காடம்புரிவானெனககொளக. உழுகிறபோது துன்னூசியா லிருபக்கமு மண்போந்துதூங்கி வழியாககினதுபோல முதுகுன்றா நடித்துக்கொண டெட்டுத்திக்கிலும் போம்பொழுது திருமேனிபபிரகாசத்தா லிருபககமு மிருள்விலங்கிற றென்பது கருத்து. (கரு)

தெய்வசிகாமணி யேமணிகூடலிற சென்றுவிறற
மெய்வசிகாமணி கண்டாபழமலை வித்தகமீ
னெய்வசிகாமணி மாவெறுங்கண்ணியை நெஞ்சகத்து
ள்வசிகாமணி ரேவாதெனையின்ப வாழ்வளித்தே.

இ-ள. தெய்வசிகாமணியே - தெய்வங்களுக்கெல்லாஞ் சிரோரத்தினமானவனே, மணி - இரத்தினங்களைக்கொண்டுபோய், கூடலிற்சென்றுவிறற - மதுராபுபெருந் தெருவினடைந்து விக்கிரயம்பண்ணும், மெய்வசிகா - உண்மையான வசிகரமுள்ளவசியனே, மணிகண்டா - நீலகண்டனே,

பழமலேவித்தக - முதுகிரியில்வாழுஞ் சதுர்ப்பாடுடையவனே, மீன் - சேலும், கெய்வசி - நெய்தடவியவாளும், கா- பூங்காவினிற்கும், மணி - அழகிய, மா - மாவடுவும், எனும- கிகொன்றுனைக்கும, கணணியை - விழியையுடைய வெனது தலைவியை, நெஞ்சகத்துவை - உனதுதிருவுளத்தில் வைத்துக்கொள்; வசி - இவளுடனேசென் றுனதூரிலேபோய் வாசமாயிரு, மணில் - இந்தமண்ணுலகில், நோவாது- விதனப் படாமல், எனே - என்னையும், இன்பவாழ்வளித்து - சுகவாழ்வைத்தந்து, கா - இரடசிப்பாயாக—எ-று.

இது உடன்போக்கில் தலைமகளைக கையிடைகொடுத்துத் தலைவனுக்கோம் படைசாறறலென்னுந் துறையாதலினிதனுட் டலைவியைமறவாம னெஞசகத்துவைத்துப் பிரியாம லிவளோடுவசித்திருவென்றுசொன்னபின்பு இதுவரையுங் களவொழுக்கத்தி லுங்களிருவர்பொருட்டுமே வருந்திக்கிடக்கு மென்னையு மண்ணிலேவாமற்படிக்குச் சுகததைக் கொடுத்துப பாதுகாவென்றுளென்க. (கசு)

வாழமரிககு மடநெஞ்சமேமென் மலர்ப்பகழி
தாழமரிககு மதறகாய்ந்ததந்தையுந் தாயுமொரு
வேழமரிக்கு மிகவுறவாம்பழ வெற்பினயல்
சூழமரிக்கு மியல்பையெஞ்ஞான்றுந் துணிந்திலேயே.

இ-ள். வாழமா - வாழ்வைவிரும்பி—இ - இந்த—கு- புவியின்கண்ணுழலுமமடநெஞ்சமே - என்துபேதைமை

யான மனமே—மென்மலாப்பகழிதாழ் - மிருதுவானமலராம் புதங்கிய—அமர் - யுத்தஞ் செய்தற்குக காரணமான—இக்கு - கரும்புவில்லையுடைய—மதற்காய்ந்த - மன்மதனையெரித்த—தந்தையுந்தாயும் - பிதாவுமன்னையுமாய் விளங்காநின்ற அர்த்தனரீசனுன—ஒரு - வேறொருசாதியான—வேழம்-யானைகள்—அரிக்குமிகவுறவாம் - தமதுபகைமைநீங்கி தமதிடத்திற் சிவகாருண்ணியமாகிய சிங்கத்துக்கு மிகவுமுறவாய்க்கலந்துவாழும—பழவெற்பினயல்சூழ - முதுகிரியின் பககங்களிற்சூழுமெல்லையிலே—மரிகுமியல்பை - இறந்தசராசர மோட்சமடையுஞ் சுபாவவிலககணத்தை—என்ஞானறும் - எந்நாளினும்—துணிந்திலையே - நிச்சயித்தறிந்தாயில்லை—என்று.

இக்குவாழமர் மடநெஞ்சமேயெனப்புணர்த்து - இப்பூமியின் வாழும்படிவிரும்பும பேதைநெஞ்சமேயெனப பொருள்கொள்க. தந்தையுந்தாயுமான பழவெற்பெனககூட்டுக.

துந்துமியும்பரி யும்பும்பழமலை சூழ்ந்துளையீர்
நுந்துமியும்பரி யாவியைவெண்டியுண் ஞெம்புலவீர்
சிந்துமியும்பரி வாலுதவார்த்துதி செய்விரமல
முந்துமியும்பரி பாகமுணடோசொல்லு முங்களுக்கே.

இ-ள். துந்துமி - தேவதுந்துமியை—உம்பரியம்பும் - தேவர்கண் முழக்கஞ்செய்யும்—பழமலை - முதுகுன்றை—சூழ்ந்து - வலம்வந்து—உளையீர் -புகழ்ந்துளைக்கமாட்டீர்—

நும் - நுமது—நுமியும் - நும்மினகாலத்தும்—பரி - நீங்கு மென்றிரங்கி யுடலஞ்சுமந்த—ஆவியை - ஆன்மாவை—வே ண்டி - அவ்வுடலோடு வாழவேண்டி—உண்ணும்புலவீர்- இவ்வுடலைவிட்டுத் தும்முங்கால மூச்சோடுபுறப்பட்டிறந்து போமே யென்னசெய்வோமென் றுள்ளமிகவுமவருந்தும்புல வீர்காள நீங்கள்—சிந்துமியும-சிந்திப்போகிற வழிகளையும்— பரிவாலுதவார்த்துதிசெய்வீர-அன்போடு கொடுக்காத வுலு த்தரைத் தோத்திரஞ்செய்வீர்—மலமும் - மும்மலமும்— நுமியும் - கெடாநின்ற—பரிபாகம் - மலபரிபாகமுமிருவினை யொப்பும்—உண்டோ - உண்டாமோ—சொல்லும் - சொல் லுங்கள்—உங்களுக்கே - உந்தமக்கே—எ-று.

இது நாத்துதிபபுலவரைப் பார்த்திகழ்ந்துரைத்தது. தும் மியுமிறந்து பேரவரைக்கண்டு நும்மாவியை வேண்டியுண் ணும்புலவீரென்க. மலமுமென்னுமும்மையால் வினையுமெ னறு வருவிக்கப்பட்டது. இபபடிப்பட்டவுங்களுக்கு மலபரி பாகமுண்டோ சொல்லுங்கோளென் றிகழ்ந்துரைத்ததாம்.

கேட்டுப்புவனங்கொளவுமென்னுமெய்க்கிராதனின்மூன் றூட்டுப்புவனம் பயின்மான்றசையுண்ட நாதனரைப் பூட்டுப்புவனங் கொளுமெய்பபழமலைப் புண்ணியன்றாள் வட்டுப்புவனம் பதினென்குநல்கினும் வேண்டிலமே.

இ-ள். கேள்-(நெஞ்சமேநீ)கேட்பாயாக—துப்பு - பொ ப்பாகிய வறுசுவையுணவும்—வனம் - வனமாகிய பானிய

மும்—கொளவும்-உணவும்—எண்ணேம்-இந்தவுடம்பு பரு த்திருக்கும்படி பொசித்திருக்கவும் நினேயோம்—மெய்கஙிரா தனின் - உண்மைஞானம் விளங்கிய கிராதகுலத்துதித்த தி ண்ணைநாயினார் வாயினின்றும்—முன்னாள் - பூரலத்தில்—து ப்பு-மென்றுமிழாநின்ற—வனம்பயில் - காட்டிற் றிரியாநின் ற—மான்றசையுண்டநாதன்-மானினறைச்சியை விரும்பி யுண்ட நாயகன்— அராப்பூண்-சர்ப்பாபரணம்பூண்ட—துப பு-பவளம்போன்ற—வனங்கொளும-அழகைக் கொண்ட— மெய்-திருமேனியையுடைய—பழமலைப்புண்ணியன்-முதுகு ரியின்கண்வாழுந் தருமசொரூபனது—தாள்-பாதாரவிந்த தை—வேட்டு-விரும்பியழியாத வாழ்வுபெறவேண்டி யிருந தலின்—புவனம்பதினான்குநல்கினும - ஒருவர்பதினான்குலக த்தையாளும்படிதரினும்—வேண்டிலம்-வேண்டோம்-எ-று

இனிக் கேட்டென்பதை தனுகரண புவனபோகங்களை யல்லவென்பதைப் பெரியோராற்கேட்டும் இத்தேகத்துக்கு ப் பொசிப்பாகிய வுப்பென்னு மினியசுவையையும் வனமாகி ய வழகுடைய சிங்காரங்களையு முள்ளே கொள்ளும்படியாக வு நினேயோமெனினுங்குடியாதபோ துடம்பிற்குக்கேட்டை த்தரும். புவனமாகிய தண்ணீரையுங் குடிக்கவு நினையோ மெனினும் அன்றி கேட்டைத்தரு மினியசோற்றை யுண்ட வுமெனினும் உபபுவனம் உப்புப்போட்ட காடிநீரும் உ கொள்ளும்படி யெண்ணோமெனினும் உப்பு இன்பத்தை

கொடுக்கும். வனம் மேலான சாதியுருக்கொள்ளவுமினையோ மெனினும் உபபுபருக்கும்படி யன்னத்தை விரும்பித்தின்ன வுமெண்ணுமெனினும் பொருந்தும். பிறரானிலையல்லதேக மென்றுகேள்விப்பட்டு உப்புவனங்கொள்ளவும் பதினாலுலகு நல்கினும் வேண்டிலமெனவே தேகத்துக்கு இம்மைக்குவே ண்டிய உண்டி வெறுப்பு, மறுமைக்கு வேண்டிய சொற்கா திபோகத்தைத்தரும புலனவெறுப்பு மெமக்குண்டாயிற்று. உண்டாகவே யிவ்விரண்டாலு மவைகளைப் போசிப்பிக்கும் கரணவெறுப்பு மவைகளையருந்தும் பொறிகண முதலிய தே கவெறுப்பு மிவற்றுளடங்கியவாறு காண்க. முதுகுன்றரது திருவடியி லழுந்து மாதவமுடையே மாதலின் மிந்தகேட் டைத்தரு முணவையுண்ணுதற் கெண்ணே முலகினையாள வும வேண்டிலமென் றுலகத்தாரைப் பார்த்துக் கூறினரெ னவறிக. (கஅ)

வேண்டவடுக்க நினைவதுன்றண்மலர் வேட்கைமணி
ணடவடுக்க ணறுநுதலார்மயல் போக்குவது
வடுக்க னயமாதிளமுலை நோந்துதவ
மாண்டவடுக்க ணிகாதோட்பழமலை மன்னவனே.

இ-ள். வேண்ட - (பாவங்களையெல்லாம் போக்கவும் புண்ணியங்களையெல்லா மடையவும்) வேண்டி — அடுக்க- சரும்படி — நினைவது (மனதிலே) தியானிக்கத்தக்கது — உ ன்றண்மலர்வேட்கை - உனது பாதாரவிந்தத்திலன்பை — ம

ணிபூண்ட - கருமைநிறங்கொண்ட—வடுக்கண்-மாவடுவகிரனைய கண்ணையுடைய—நறுநுதலார் - வாசனைபொருந்திய நுதலையுடையாரிடத்தின்மயங்கும்—மயல் - மயக்கத்தை—போக்குவது - விட்டுவிடத்தக்கது—நீண்டவடுக்கல்- நெடியவிமயமீன்ற—நயம - இன்பம்பொருந்திய—மாது- உமையவளுடைய—இளமுலை-முற்றுமுலைகளானவை—நேர்ந்து- (கம்பாநதியிற்றழுவியவையும்போதிரண்டுபுயங்களிலுஞ்)சேர்ந்து—உதவு - கொடுக்க—மாண்ட - வயங்கிய—வடுக்கள்-முலைத்தழும்புகளும வளைத்தழும்புகளும்—நிகர்தோள - இரண்டுபுயங்களினு மொன்றுகொன் றுவமையாகத்தோன்றும்—பழமலைமன்னவனே-முதுகுன்றுக்கிறையவனே—௯-று

வேண்டவடுக்கவென்பதை - வேண்டிக்கொள்ளவு மடுத்து வாழவுமென் றும்மைத்தொகையாக்கினு மமையும். மாண்டவடுக்க ளெனப்பன்மையாற்கூறலின் முலைத்தழும்புடன் வளைத்தழும்பும் வருவிக்கப்பட்டது. அன்றிமுலை யெடுத்துக்கூறலினது பொருந்துதற்குரிய மார்பும் சே று தலின் அதிற்பதியும் வளைத்தழும்பையுங் கூறவேணமய னக. நிகாதோளென்பது-தனக்குத்தானே நிகரான தோளினுமமையும். இதன்கருத்தாவ தென்னையெனின்-பழமன்னவனே உலகத்தார்வேண்டவு மடுக்கவுந் தியானிக்கபடவ துன்பாதாரவிந்தமேயன்றி வேறொன்றுமில்லை, போக்விடத்தக்கது நறுநுதலார் மயலையென்றுணர்த்தெனவறி

இதனுட்டியானிக்கத்தக்க ன்றுணைமலரொன்றாது வேண்டவடுக்க வெனவிருவகையாரினவென்றதென்னையெனின் வேண்டப்பட்டன காமாதிகள் அடிக்கத்தக்கது மோக்ஷமாதலின் புத்திகாமியமுமுத்திகாமியமுமடங்குகிறது.(உ௰)

மன்னவமாதவ னாடும்பழமலை வாணமணி
யன்னவமாதவ னன்மலைக்காற்கசைந் தம்மதிகண்
டென்னவமாதவ னல்லின்வந்தானென் றிரங்கிமதன்
றின்னவமாதவ நோமேயெனசெல்வத் திருந்திழையே.

இ-ள். மன்னவ - (எவ்வுலகினுக்கு) மிறைவ—மாதவனாடும் - மகாவிஷ்ணு வேனவுருவாய்த்தேடும் பாதாரவிந்தத்தையுடைய—பழமலைவாண - முதுகிரியில்வாழ்பவனே—மணியன்னவ - மாணிக்க மணிக்கொப்பானவனே—மா - பெருமைதங்கிய—தவன் - தவத்தையுடைய (வகத்தியன் வாசமாயிருக்கப்பட்ட)—நன்மலை - நல்லமலையாகிய(பொதியந்தினின்றுமவராகின்ற)—காற்கு - தென்றலுக்கு—அசைந்து - உடல்வருந்தி—அம்மதிகண்டு - அழகிய பூரணசந்திரனைப் பார்த்து—என்னவம் - இஃதென்னபுதுமை—ஆதவன்-(பகற்போதுவிளங்காநின்ற)சூரியன்—அல்லின்வந்தான - (சந்திவிளங்காநின்ற) விரவிலேவந்துவிட்டான—என்று-இப்படியுரைத்து—இரங்கி-யழுது—மதனின்ன-மன்மதனியேயிரவிற்பிரித்து தனித்து விரகப்படுமிவளுயிரைப) க—அழு - ஆச்சரியம்—தவ - மிகவும—நோமே - நொ

ந்திடலாமோ—என்-எனனுடைய—செல்வம்-நிக்ஷேபமாகி ய—திருந்திழை-திருந்தியவிழைகளைத் தரித்தபெண்—எ-று.

பரமசிவனுக்குநிகராகிய விருடியாதலிற் குறுமுனியை மாதவனென்றார். இஃது நூலிவருந்திய வண்ணமுரைத்தது ஆகுபெயராற் றிருந்திழையை யுடையாளெனக. (௨௧)

திருந்தியவேதம் புகல்பரிசேயறஞ் செயதுடலம்
வருந்தியவேதம் பொருளெனவாழ்பழ மாமலையான்
பொருந்தியவேதந் தருநஞ்சுணெனிற பூமலர்கா
மருந்தியவேதம புயமனையாட்கணி மங்கலமே.

இ-ள். திருந்திய-(இராவணன்றற) றிருத்தமாகிய—வேதமபுகல்பரிசே-வேதங்கள்சொலலும் வசனப்படியே—அறஞ்செய்து - தருமங்களைபபண்ணி—உடலம்வருந்தியவே-தேகமவருத்தபபட்டுச்செய்தபுண்ணியமே—தமபொருளென-தமமுடையசெலவமென்று—வாழ்-(அந்தப்புண்ணியருளத்தில்)வாழும்—பழமாமலையான்-முதுகுன்றெனனுமபெரியமலையுருவானவன்—பொருந்திய - சமுத்திரங்கடையும்போது கடலிற்றோன்றிய—வேதந்தரும-குற்றத்தைக் கொடுக்கும—நஞ்சுணெனில் - ஆலகாலவிடத்தை யுண்ணுனேயாகில்—பூமலா - தாமரைப்பூமலாந்த—காமா - அழகிய—உந்திய-நாபித்தானத்தையுடையமாயவனே—அமபுயமனையாட்கு - மனாபபூவிலுறைபயுமுன் மனையாட்டிக்கு—அணிமங்கீரிதததாலிச்சரடு—எது - எபபடியிருக்கும்—எ-று.

இது மாயவனை முன்னிலையாக்கிக்கூறியது. (

மங்கலமாவி மலைசேர்பழமலை வாணமணிச்
செங்கலமாவி மலர்கைக்குருகொடு செல்கவெமர்க
கிங்கலமாவி வளைநீயணைந்த தினியுனைதிா
தங்கலமாவி தரிற்கொடுசேறுமெந் தண்மனைக்கே.

இ-ள். மங்கலமா - நிதநியகல்லியாணமாக—விமலைசோ - விருத்தாம்பிகைகூடி மகிழ்ந்திருக்கும்—பழமலைவாண-முதுகிரியில்வாழ்பவனே—மணிச்செங்கலம் - இரத்தினங்கள்செருகிய சிவந்த பொன்னாபரணங்கள் யாவும்—ஆவிமலர் - தடாகத்திற்பூதத தாமரைமலர்போன்ற—கைக்குருகொடு - கையிலணிந்த வளையலோடும்—செல்க - (கழன்றுபோய்விட்டாலும்)போகட்டும்—எமாக்கு-எம்முடைய சுற்றத்தாருககு—இங்கு - இந்தவிடத்தில்—அலமா - துன்பமாக—இவளை - இந்தநாயகியை—நீயணைந்தது - நீகளவிற்புணர்ந்து (பினமணஞ்செயயாது விட்டுப்பிரிநதது நன்ருயிருந்தது நனருயிருந்தது)—இனியுனைதிர் தங்கலம் - இனி யுன்முன்னேநினறுன்முகத்தைபபார்ககமாட டோம—ஆவி தரில் - இவளுயிரைமாத்திர நீ கொடுத்துவிட்டால்—கொடுசேறும் - கொண்டுசெல்லுதும்—எந்தண்மனைககே-எமது தண்மைபொருந்தியவீட்டிறகே—எ-று.

மயறுது களவுபபுணர்ச்சியிற்பிரிந்து நீட்டித்த தலைவன்வ(ரை)ப்பாங்கியிற் பழிகூறி வரைவுகடாவியது. இவளை நீகளவிற்புணர்ந்து எம்மினத்தாககுத் துன்பமாகப்பிரிநதது நன்

ருவிருந்த தினியுன்னெதிர் தங்கலம் மணிச்செங்கலமாவி ம லர்க்கைக குருகொடுசெல்க வாவிதரிலெமது தண்மனைக்கே சேறுமெனக்கூட்டுக. இவளை நீ களவிலணைந்ததெமர்க்கிங்க லம் ஆவிதுவென்னுவதிசயமினி யுன்னெதிர் தங்கலமெனினு மமையும். (உ௩)

தண்டங்கமண்டலங் கொண்டுபழமலைச் சங்கரதாட்
புண்டங்கமண்டலங் கண்டுசென்றாலுமெய்ப்போதமுறா
பண்டங்கமண்டலங் காரமின்னாகினன் பாட்டியலைக
கொண்டங்கமண்டலம பாழாகியவுனைக கூறலரே.

இ-ள். தண்டங்கமண்டலங்கொண்டு - தண்டையுங்க மண்டலத்தையுங் கையிற்பிடித்துக்கொண்டு (சன்னியாசிய ராய்)—பழமலைசசங்கர - முதுகிரியில்வாழுஞ் சங்கரா—தா ட்புண்டங்க - பாதங்கள் கொப்புளமெய்த—மண்டலங்க ண்டுசென்றாலும் - பூப்பிரதக்ஷணமாக வநேகதேசங்களைப பார்த்து வசித்துத்திரிந்தாலும—மெய்ப்போதமுறார் - உண மைஞானத்தை யடையமாட்டார—பண்டு - முன்னொருகா லத்தில்—அங்கம - எலும்பை—மண்டு- நெருங்கிய—அலங் காரமினனாகினனை - சிங்காரத்தையுடைய பெண்ணாகினை (திருஞான சம்பந்தனுரைத்த)—பாட்டியலைககொண்டு - ட்டினதிலக்கணத்தைக்கொண்டு—அங்கு - மதுரையில—அ மண்டலம் - சமணரிருந்தவூரெல்லாம்—பாழாகிய - ஞானி

யமர்க்குவித்த—உன்னைக்கூறலரோ - உன்னைத் தோத்திரஞ்செய்யாதவர்கள்—எ-று.

பழமலைச்சங்கர் வுனைக்கூறலர் தண்டங்கமண்டலங்கொண்டு நாட்புண்டங்க மண்டலங்கண்டு சென்றாலு மெய்ப்போதமுறாரெனக் கூட்டுக. (உச)

கூற்றைகொடியங் கடப்பானருளெனக் கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங் கரஞ்சேர்பழமலை யீசனணி
நீற்றைகொடியங் குளமேவெறுத்தி நிறைபெருகு
மூற்றைக்கொடியங் கினமோடருந்து முடம்பினையே.

இ-ள். இயங்குளமே - எங்கணுந்திரியாநின்ற வெனது மனமே—கொடியம்-பொல்லாதநாம்—கூற்றை-இயமனை—கடப்பான் - வெல்லும்பொருட்டு—அருளென - கிருபைசெய்யென்று—கூய் - முறையிட்டுக்கூவி—பரவி - தோத்திரஞ்செய்திறைஞ்சி—ஏற்றைக்கொடி - இடபக்கொடியானது—அங்கரஞ்சேர் - அழகியகரத்திற்சேர்ந்த—பழமலையீசனணி நீற்றைக்கொடு- முதுகிரிநாதரணிந்த விபூதியைப் பொருளாகக்கொண்டு—நிறைபெருகுமூற்றை - மலநிறைந்து நவத்துவாரத்தினு மொழுகாநின்ற வழுக்குமயமாய்—கொடி - காக்கை—அங்கு - சுடலையிற் கிடக்கும்போது—இனமோடு - தனதுசுற்றத்தோடு—அருந்தும் - தின்னப்பட்ட—உடம்பினை - இந்தத் தேகாபிமானத்தை—வெறுத்தி - வெறுத்து விடக்கடவாய்—எ-று.

உளமேகொடியேங் கூறறைக்கடப்பா னாருளெனப் பழமலைநாதனைக் கூய்ப்பரவியவ னணிநீற்றைக்கொடு வுடம்பினைவெறுத்தி யெனக்கூட்டுக. ஏற்றுக்கொடி—ஏற்றைககொடியெனத்திரிந்தது. ஐயீற்றுடைக்குற் றுகரமுமுளவேயெனனும் விதியாலெனவறிக. சலனப்படுதன் மனத்துககியல்பாதலின் இயங்குளமென்றார். இனமோடருந்துதல் காககைகுணமாதலி'னினமோடருந்துமென்றார். நிறைபெருகு மூற்றையுடம்பினை யெனக்கூட்டுக. (உரு)

உடற்குவலையந் தகன்கைககயிறென் றுணர்ந்துளமே
கடற்குவலையம் புகழ்சீர்முதுகிரிக கணனுதற்கு
மடற்குவலையம் புரைகளத்தாற்குநம மனறமாந்த
நடற்குவலையம் பணியாமவற்கன்பு நண்ணுகவே.

இ-ள். உளமே - மனமே—உடற்கு - நமதுடம்பாகிய மீனுக்கு—வலை - வலையாவது—அந்தகன்கைக்கயிறென் றுணர்ந்து - இயமன் கைபபாசககயிறென்பதை நன்றாய்விசாரித்து—கடற்குவலையம்புகழ்சீர்முதுகிரிக்கண்ணுதறகு - கடலையாடையாகவணிந்த பூமியிலுள்ளார புகழாநின்ற செல்வம்பொருந்திய பழமலையுருவான நெற்றிககண்ணனுக்கு—மடல் - இதழையுடைய—குவலையம்புரை - நீலோறபலத்தைக்கொபபான விடம்பொருந்திய—களத்தாற்கு- கண்டத்தையுடையவனுக்கு—நம்மன்றமர்ந்தநடற்கு-நமமுடைய கனகசபையி லாடாநின்ற சபாபதிககு—வலையம்பணியாமவற்கு-

வாகுவலயத்தைப் பாம்பாகத் தரித்தவனுக்கு—அன்புநண்
ணுகவே - நீ யன்னைச்செய்தி—எ-று.

வாகுவலயம்-தலைக்குறைவிகாரம, உளமேயுடற் கந்தக
ன்கையபாசம் வலையென்றுணர்ந்து வாகுவலயம்பணியாம
வற்கன்பு நண்ணுகவெனக்கூட்டுக. (உ௬)

நட்டுவனா யறிகிலன்றண்ணுமை நந்திநின்று
கொட்டுவனா யிரைதேர்கயமுது குன்றுடையாய்
தட்டுவனா யகலாதநான்முகன் றாளமுயர்
குட்டுவனா ரவனைவான்பரவுநின் கூத்தினுக்கே.

இ-ள். நாரையிரைதேர் - நாரைகண் மீனிரையைத்தே
ர்ந்து திரியாநின்ற—கயமுதுகுன்றுடையாய் - தடாகஞ்சூழ்ந்
த பழமலையுடையவனே—உயர்குட்டுவன் - உயர்ந்தகுட்டு
வனாகிய (சேரமானும்)—ஆரவனைவான்- ஆத்திமாலையைத்
தரித்தவனாகிய சோழனும்)—பரவும்-வணங்காநின்ற—நின
கூத்தினுக்கு-உனதுநாட்டியத்துக்கு—தண்ணுமைநந்திநின்
றுகொட்டுவன்-நந்திகேஸ்வரன்பின்னாகநின்று மத்தளங்கொ
ட்டுவன்—தட்டுவனாயகலாதநான்முகன்றாளம - நாரா
யணனைநீங்காத நான்முகன்றாளத்தைத்தட்டுவன்—நட்டு
வனாயறிகிலன் - நட்டுவன்யாரொருவனையும் யானகண்டு
ங்கேட்டு மறிந்திலேன்—எ-று.

முதுகுன்றுடையாய் நினதுகூத்துக்கு நந்திதண்ணுமை
கொட்டுவன், நான்முகன்றாளந்தட்டுவன், உனக்குக் கூத்து

கற்பித்தநட்டுவனை நாளுகும் வேதபுராணங்களிடத்துங் கேட்டறியேனென்பதுகருத்து. உலகத்தை யசைப்பிக்கத்திருவுளங்கொண்டு பஞ்சகிருத்தியமே நாடகமாகவிளையாடுதலி னுலகத்தார்போல வொருவர்மே னின்றுகற்பித்த தன்மை யுணர்க. (உள)

கூத்துகந்தம்பல மேவுறுமோர்முது குன்றனைநம்
பாததுகந்தம்பல் மாரினுமெள்ளினும பண்பனைத்தாள்
சாத்துகந்தம்பல மாமறையாற்புகழ் தாணுவைநா
மேத்துகந்தம்பல மார்பொதுமாதனை யெள்ளினமே.

இ-ள். கூத்துகந்து-ஆடுதற்குவிரும்பி—அம்பலம்-அம்பலமாகிய (கனகசபையிலே)—மேவுறுமோர்முதுகுன்றனை-வாசம்பண்ணுமொப்பற்ற முதுகிரியானை—நம்-நமது—பாட்டை—துகந்து - உகந்து—அம்பலம் - வித்துவசபையிலே—ஆர் - யாவராயினும்—இனும் - இனிமேலும்—எள்ளினும் - இகழ்ந்துரைப்பினும புகழ்ந்துரைப்பினு முனக்கென்னபயமென்று—தாளசாத்தும்பண்பனை-தனது திருவடிகளிற் பிரியமாகத்தரித்துக்கொண்ட வாசையுடையவனை—உகந்தம் - உகாந்தகாலங்களினும்—பலமாமறையாற்புகழ்தாணுவை - அனந்தமான வேதங்களாற்றுதிபெற்ற மூலஸ்தம்பமாவிருப்பவனை—நாமேத்துகம்-இன்னுநாங்க டுதிப்போம்—தம்பலமார் - (பலருமென்றுமிழாநின்ற) தம்பலச்சாற்றைப் புசியாநின்ற—பொதுமாதரை - ஒருவற்குவுரித்தில்லாத க

ணினையாது சிற்றின்பத்தை—எள்ளினம் - இகழ்ந்துவிட்டோம்—எ-று.

உகாந்தம்-உகரந்தமெனக் குறுகின்றது. எள்ளினுமென்னு மும்மையாற் புகழினுமெனவருவிக்கப்பட்டது. முதுகுன்றர் தாளையடையுஞானிகளை யொருவரிகழினும் புகழினு மவர்களுக்குப் பலியாமலது செய்தாரையடைதலி னுனக்கென்ன பயமென்றுரைக்கப்பட்டது. எள்ளினுமென்னு மும்மையாலெள்ளாரென்று தோன்றுகின்றது. நமதுபாவைத்தாளிறசாத்தும் பணபனையென மாறிக்கூட்டுக. அன்றித் தமக்கிழிந்த சிறுகவிஞர் சபையிலிகழினும் பெருங்கவிஞர்க்குக் குற்றமும்பெருமையும்வாராது. ஆகையாற்பெருங்கவிஞரது பாவையவரினுமேலான மகாகவிஞரான மதிக்கப்படுமாகலிற் சிறுகவிஞரெள்ளினும் புகழினும் பயனென்னென்றும இதற்குதாரணம் (நாலடியார்—அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு,மிகைமக்களான் மதிக்கற்பால-நயமுணராக், கையறியாமாக்களிழிப்புமெடுத்தேத்தும், வையாரவடித்தநூலார்) என்பதனானறிக. உலகத்துள்ள மற்றையகவிஞர் சிறுகவிஞரென்பதுமிதுபாடியருளிய சிவப்பிரகாசதேவர் பெருங்கவிஞரென்பது மவரவர்பாடலான்விளங்குமாதலி னவ்வக்கவிகளைக்கேட்டு அவற்றினுட்படு மலங்காரங்களினாலுணர்க. மதுரையிற் சங்கப்பலகையிற் சொக்கநாயகர் கவிஞராய்ச் சங்கத்தாருடன் வந்திருந்து திருவிளையாடற்புரிதலின் முதுகுன்றரை மகாக

வியென்று மவரங்கீகரிக்கப்பட்ட திவாகவியென்றுங் குறிப்பால்விளங்குமன்றியுமிவாமுதாகுன றனையன்றி நரத்துதிசெய்யாமையினிவனைபபெருங்கவியென்று நரத்துதிசெய்பவனைச் சிறுகவிகளென்றுங் கூறிறுமென்க. (உ௮)

எள்ளாதவனை யெழுமபாபழமலை யென்றிருந்த
கள்ளாதவனை மகவரிந்தாசெனக் கட்டுரைத்து
விள்ளாதவனை மகிழ்பரமாவழல் வெண்மதியைத்
தள்ளாதவனை முடிசூடெம்மாது தருகுதற்கே.

இ-ள் வெல்லவணங்குமலையாய - திரிபுரத்தை வெல்லுதற்கு மலையைமெல்லவளைத்தவனே, முதுகிரிவேதியனே- முதுகிரியில்வாழும வேதியனாகிய வந்தணனே, மெல்ல-மெதுவாக, வணங்குவினைவால் - விருபபதத்தாற்செறுழும், எதிர்ந்திட - எதிரவர் தன்னுடைய தோளழகைப்பார்த்திட, வேனெடுங்கணெல்லவணங்கு - வேல்போலுமநீண்ட கண்களையுடைய நல்ல தெய்வமகளிரபோன்ற வெமதுபெண், வளையுடையோடுநடந்திலை - நழுவிப் பறிகொடுத்த வளையலோடுமவஸ்திரத்தோடு நடந்தாயிலலை, நீ - நீ, சொல்லவணங்கும் - இவளைக் கொல்லும்படியாக வளைந்த, மதி - (மூன்றாமபிறையாகிய) மதியை, சுமந்தேதின்றகொள்கையென்னோ - சுமந்திருக்குங்கொள்கை யென்னகாரணம—எ-று.

இதுவு நற்றாயிரங்கல் (எக)

வேதியவாவி தனக்காவியாகிய வித்தகபெண
பாதியவாவி மலாதரேசன்பெருகும் பழமலைவாழ்

சோதியவாவி வருவிடைப்பாகநின் றொண்டருறு
நீதியவாவி யவரையென்றோசென்று நேர்குவனே.

இ-ள். வேதிய - வேதியனென்று (வேதங்களைச்சொல்பவ னே), ஆவிதனக்காவியாகியவித்தக - ஆவியாகிய வுயிருக்கு யிராயிருக்கின்ற ஞானசொரூபியே, பெண்பாதிய - உமையை த்திருமேனியி லொருபாதியிலுடையவனே, வாவிமலர்த்தே ன்பெருகும்பழமலைவாழ்சோதிய - தடாகத்திற்பூத்த தாம ரைமலராக டேனைபபெருக்கும் பழமலையில்வாழுஞ் சோதிரு பனே, வாவிவரும் - தாவிவராநின்ற, விடைபபாக - இடப வாகனனே, நின்றொண்டருறுநீதி - உனதடியார்பொருந்திய நீதிமார்க்கத்தை, அவாவி - வாஞ்சித்து, அவரை - அவர்கள் கூட்டத்தை, என்றோசென்றுநேர்குவன் - அடியேனெந்த நாளடைந் துய்குவேன்—எ-று. (எஉ)

நேருமடியா தமக்குறவாமவர் நேசமறச்
சோருமடியா தமையணுகாதவர் தூமபியினைற்
சாருமடியர் மணிநிறவண்ணனன் றனையிடந்து
தேருமடியா முதுகுன்றவாணுதற நீக்கண்ணரே.

இ-ள். நேருமடியா தமக்கு - தனதருளையடைந்த வன் பர்க்கு, உறவாமவா - நேயமானவா, நேசமறசசோருமடிய ர் - அன்பறும்படி சோர்ந்துவிட்டுத் திரியாநின்ற சோமபலை யுடைய மூடா, தமையணுகாதவா - அவாதமமைச சேராத

வர், துய்பியினுற்சாருமடியர் - யானையினுற்சார்ந்த வஸ்திரம்புனைந்தவர், மணிநிறவண்ணன் - நீலரத்தினம்போலு நிறத்தினையுடையவனுகிய விஷ்ணு, தளையிடந்துதேரும் - வராகமாய்ப் பூமியைப்பிளந்துபோய்த் தேடப்பட்ட, அடியர்-பாதபங்கயத்தையுடையவர், முதுகுன்ற - பழமலையுருவான, வாணுதற்றீக்கண்ணா - ஒளிபொருந்திய லலாடத்தி லக்கினிக்கண்ணையுடையவர்—எ-று. (எரு)

கண்டீரவந்தனை நேர்ந்தாங்கருகக் களிற்றினைமுன்
கொண்டீரவந்தனை வானோர்செயுமுது குன்றனொடு
வண்டீரவந்தனை நோவாளைகோலம் மதனனெய்யும்
புண்டீரவந்தனை சேர்தியென்றோதுமின் போமின்களே.

இ-ள். கண்டீரவந்தனைநேர்ந்தாங்கு - சிங்கத்தையெதிர்ந்த தன்மைபோல, அருக - இறக்க, களிற்றினை - (தாருகாவனத் திருடிகளேவிய) கரியை, முன்கொண்டு - முன்னாலே கையிற்பிடித்துக்கொண்டு, ஈர - தோலையுரிக்க, வந்தனைவானோர்செயுமுதுகுன்றனொடு - (அதுகண்டு) வானவர் பூசை செய்த பழமலைநாதனோடு, வண்டீர - வண்டினங்காள், அவந்தனைநோவாளை - அவமாகிய காமநோயைப பொருந்தின வெமதுபுதல்வியை, கோல் - பாணங்களை, அம்மதனன்-அழகிய மன்மதன, எய்யுமபுண்டீர - எய்தபுண்களாற, வந்தனை - வந்து, சேர்தியென்று - கூடி யணைதியென்று, ஓதுமின்-சொல்லுங்கள், போமின்கள்-விரைந்துசெல்லுமின்-எ-று

வுந்து என்னும் வினையெச்சம் - வந்தனையென முற்றுச்சொற்போல நின்றது. இஃது வண்டுவிடுதூதாக வணடினை முன்னிலையாக்கிக் கூறியது. (எச)

போதுமின்மாலை வகைவகையாகவம் பொற்றொடியீ
ரோதுமின்மாலை தரின்வம்மினில்லையென் றோட்டினரேல்
மாதுமின் மாலை வருமுனஞ்சாமென்று வண்கைமலர
மோதுமின்மாலை மகிழ்குனறைவாணர்தம் முன்னடைந்தே

இ-ள். போதுமின்-செல்லுங்கோள், மாலைவகைவகையாக - ஒழுங்கோடு வரிசைவரிசையாக வொருவர்பின்னொருவர் நடந்துபோய், அம்பொற்றொடியீர் - அழகிய(வெனதுயிர்க்குயிரா யிராநின்ற) பொன்வளையையணிந்த தோழிமார்களே, ஓதுமின்-(எனது காமநோயாற்பெருகிய வருத்தத்தைச்) சொல்லுங்கோள், மாலைதரில் - அவர் தோளிற்புனைந்த கொன்றைமாலையைத்தந்தால, வம்மின் - வாங்கிக்கொண்டு திரும்பிவாருங்கள், இல்லையென்றோட்டினரேல் - கொடுப்பதில்லையென் றுங்களைத் துரத்துவாராயின், மாதுமின்-மின்னற்கொடிபோன்ற வெமது தலைவியானவள், மாலைவருமுனஞ்சாமென்று - மாலைப்போது வருமுன்ன மிறந்துபோவாளென்று சொல்லி, வண்கைமலர்மோதுமின் -(நாமென்செய்வோம் கெட்டோமே யினியெப்படியென்று) வண்மையானவுங்கள் கரங்களாலே முகத்தி லறைந்துகொள்ளுங்கோள், மாலைமகிழ்-தன்னை வணங்கித் துதித்த மாயவனான மகிழ்ந

துறையும், குன்றைவாணர் தம்முன்னடைந்தே - பழமலை நாதர்க்கெதிரோதினறு—எ-று.

இஃது பாங்கியைத் தலைவி தூதேவியது. மாலைவகை வகையாக வோதுமினெனபதை - நான்கொண்ட காமநோயை வகைவகையாக வோதுமினெனினு மமையும. இல்லையென் றொட்டினரோலெனப பாடமாயின் - இல்லையென்று சபதம்ப ண்ணுவாராயினெனப பொருள்கொளக. (எரு)

முன்னஞ்சிலம்பு சிலையாகவியநன் முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்பு சிலம்புதலோடையிற பூஞ்சிறக
ரன்னஞ்சிலமபு நடையிளமானை யனஙகனெய்து
தனனஞ்சிலமபு குவளையல்லாது தணநதனனே.

இ-ள. முன்னம - பூருவத்தில, சிலம்பு- மேருவை, சிலையாகவிய - விலலாகவளைதத—நன்முதுகிரியாய் - நல்லபழமலைநாதனே—பொன்னஞ்சிலமபு - பொனனாற்செய்த வழகிய நூபுரங்கள்—சிலமபுதல் - ஒலிசெய்வது—ஓடையிற் பூஞ்சிறகரன்னம் - வாவியிற்பூத்த தாமரையிலிருக்கு மழகிய சிறகுகளையுடைய வெகினத்தினது—சிலம்பு - வாய்த்தொனியாகச் சத்திக்கும்படி—நடை - நடககபபட்ட—இளமானை - இளம்பருவதனதயுடைய நமதுபுதல்வியை—அனஙகன்-அங்கவீனனாகிய மனமதன—எய்து - பிரயோகித்து—தன்னஞ்சில் - தனதுபாணங்களை தென்னுந்தொகையில—அயபுகுவளையலாது - நீலோறபலபாணமொன்று மாத்திரக்

தவிர—தணந்தனனே - (மற்றைநான்குபாணங்களையு மொழித்துவிட்டு) வறியனாய் நீங்கிபோனான்—எ-று.

எனவே கொல்லுதலொன்றுதவிர மற்றையவுபத்திரவமெல்லாஞ் செயதுவிட்டானென்பதறிக. இஃது நற்றாயிரங்கல். (எசு)

தணந்தவளக்கரி மேனியளாங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரி னின்றழுமோவல வாவுயிர்க
ளுணநதவளககரி தாமுதுகுன்றா னோங்கமா
கணந்தவளக்கரியா னேத்திறையன்றிக் காப்பிலையே.

இ-ள். தணந்தவள் - என்னைப்பிரிந்ததலைவி—அக்கரி மேனியளாங்கொல் - அந்தக்கரிபோலக் காமநோயால்வெந்த மேனியளாயிருந்தனளோ—வெண் - வெளுத்த—சங்கினங்கன்மணந்த - பணிலங்களைப்பொருந்தின—அளக்கரின் - கடனீரைப்போல—நின்று- தனித்துநின்று—அழுமோ - கண்ணீரைப்பெருக்கித் துயர்கூருமோ—வலவா - தேர்ப்பாகனே—உயிர்கள் - சராசரமாகிய வான்மாக்களுக்கு—உள் - மனதிலே—நந்த - பேரொளியாய்வளர்ந்து பிரகாசித்திருந்தும்—அளககரிதாம் - அளவிட்டறிதற் கருமையாகிய—முதுகுன்றான் - பழமலைநாதன்—ஓங்கு - உயர்ச்சிபெற்ற—அமரகணம் - தேவசாதியான பதினெண்கணமும்—தவளக்கரியான் - வெள்ளையானையையுடைய புரந்தரனும்—ஏத்து -

புகழும்—இறையன்றி - கருத்தாவையன்றி—காப்பிலை - அவனே வேறேகாககுமவரில்லை—எ-று.

அளக்கவென்னு நிலமொழியீற்றினகரம் வருமொழிமுதலகரத்தின்புணர்ச்சியாற கெட்டுநின்றது. (எஎ)

காப்புக்கரியுந் திருமகணாயகன் காபபவற்றின்
பூப்புக்கரியுந தலையுடையானும் பொருந்தவைத்தான்
மாபபுக்கரியுங் குயிலும்பயில்பொழில் வண்டில்லையான
மூபபுக்கரியும் புலியுங்கொன்றீாந்த முதுகுன்றனே.

இ-ள். காப்பு - காக்குந்தொழிலை—உககு - உதிர்த்துவிட்டு—அரியும் - விண்டுவும—திருமகணாயகன் - அந்தத் திருமகளுக்கு நாயகனானவன்—காபபவற்றின் - காககாநின்ற வுலகத்தினது—பூ - உணடாககுந்தொழிலில்—புககு - புகுந்துபடைத்த—அரியும்-அரிந்த—தலையையுடையானும்-(முற்காலத்தில் வயிரவமூர்த்தி கைநகநுதியாறகிள்ளியெறிந்த)நடுத்தலைககுறையையுடையபிரமனும் - (ஒருவருக்கொருவர்தாங்களே பிரமமென்று)—பொருந்தவைததான - போாபொருந்தும்படி யுபாயஞ்செய்தவன—மா - மாமரத்திலே—அரியும் - கிளியும்—குயிலும் - கோகிலமும்—புககு - புகுந்து—பயில் - கூவிககொண்டுவாசம்பண்ணுகின்ற—பொழில்-சோலைகள் சூழ்ந்த—வண் வளபபத்தையுடைய—தில்லையான்-சிதம்பரமென்னுந்தலத்தையுடையவன்—மூபபு - முதிர்ந்த—கரியும் - குஞ்சரத்தையும்—புலியும்-வேஙகைபபுலியையும்—

கொன்று - வதைசெய்து — நாகத் - தோலையுரித்துத்தரித்து கொண்ட — முதுகுன்றனை - பழமலைவடிவானவனை — எ-று.

பொருந்த வைத்தானெனவே அவரது மதமடங்கச்செய்வித்தானென்பதாம். காப்புக்கு காக்குந்தொழிலை விட்டெனவும் பூப்புக்கு பூத்தலென்னும் படைப்புத்தொழிலினுழைந்த நான்முகனு மெனக்கொள்க. மாய்ப்புக்கு மாவிறகுடியிருந்தெனவுங்கொள்க. குடிபுகுதலைப்புகவென்றார். (எஅ)

முதுமறையந்த முறுபொருளேநன் முழுப்பணிக்கு
விதுமறையந்த முடியாய்புராணம் விளங்கிரண்டொன்
பதுமறையந்த முதுகுன்றவாணநின் பாதமவணங்
குதுமறையந்த கணமாயிலெம்மைக் குறுகிடினே.

இ-ள். முதுமறையந்தமுறுபொருளே - பழமையான வேதமுடிவிலே பொருந்திய நிக்ஷேபமானவனே — நல்-நன்மையான — முழுப்பணிக்கு - முழுமையும் வல்லமைபெற்றுத் திசைகளைச்சுமக்கப்பட்ட வாசுகியென்னும் பாம்புக்குப் பயந்து — விது - மூன்றாம்பிறை — மறை - ஒளித்துக்கொள்ளும் — அந்த - அத்தன்மைத்தான — முடியாய் - சடாமகுடத்தையுடையவனே — புராணம் - புராணங்கள் — விளங்கு - விளங்காநின்ற — இரண்டொன்பதும் - பதினெட்டும் — அறை - இறைவனென்றுசொல்லும் — அந்த - அழகையுடையவனே — முதுகுன்றவாண - பழமலையில்வாழ்பவனே — நின்பாதம் வணங்குதும் - உனது பாதாரவிந்தத்தைத் தொழுவாம் —

அறை - காலினாலுதைத்திடுதி—அந்தகனை - இயமனை—மார்பில் - மார்பினிடத்திலே—எம்மைக்குறுகிடினே - எங்களைப் பிடிக்கவந்தால்—எ-று.

குன்றவாணனின பாதமவணங்குதும் எம்மை யநதகன குறுகிடின அவனை மார்பிலறைறயெனககூட்டுக. (எக)

குறுகுமுனிவனை யன்றாண்டவிம்முதுகுன றனுக்கு
மறுகுமுனிவனை செய்தாலுய்வாரொவா வநதருளொன்
றறுகுமுனிவனை போதுமிடாாநம ரோர்முனிவு
முறுகுமுனிவனை யெய்தாரறிவறு மூடரினே.

இ-ள். குறுகுமுனிவனை - அகத்தியனை—அன்று - அக்காலத்திற்றானே—ஆண்ட - அடிமைகொண் டிரக்ஷித்த—இ - இந்த—முதுகுன றனுக்கு - பழமலைநாதனுககு (மால் கொணடவெனனை)—மறுகு - தூககபபடும்படி—முனிவு - கோபத்தை—அனை - எனனன்னையே—செய்தால் - செயவாளாயின—உய்வாரொவா - எவாதாம் பிழைததுய்யுந தன்மையுடையவராவர்—வந்து - எமதெதிரொழுந்தருளி வநது—அருளொன்று - கேட்டவரங்களைத் தாருமென்று—அறுகும்-அறுகமபுல்லையும்—உனி - உன்னித்தியானித்து—வனை - வனையபபட்ட—போதும - பூமாலையையும்—இடாா - அவன்றாளிலிட்டுப்பூசியாா—நமனா - இயமனார்—முனிவு - கோபததை—முறுகுமுன் - முதிாநதுகாட்டிப பிடிககவருமுன்னே—இவனையெய்தாா - இநதபபழமலைநாதனைச் சரணடையா

தாராகிய—அறிவறுமூடரின் - அறிவில்லாத மூடர்களைப் போல்—எ-று.

இஃது - நற்றாய் முனிவுகண்டு தலைவிவருந்தியது. இதனுள் முதுகிரியானையெய்தாத மூடரைப்போலன்னையே மறுகுமுனிவுசெய்தா லியாவர்தா முலகத்திற்பிழைக்குந தன்மையொன் றுலகத்தின்மேலேற்றித் தலைமகள் கூறியவாறாயிற்று. முதுகுன்றனுக்கு - நான்மயல்கொண்ட முதுகிரியான்பொருட் டென தன்னையே யென்மீது மறுகுமுனிவுசெய்தா லென மையலையுந் தலைவியையும் வருவித் துரைத்துக் கொள்க. (அ0)

மூடாநமாதி மிரையடைந்தாயலென் முன்னணுகன்
மீடாநமாதி பெருமானுதைதகினு மெய்ப்புகழைப்
பாடாநமாதி யெழுத்தைந்துமோதிப் பழமலைவாழ்
வீடாநமாதி யடியாரடியருண் மேவினமே.

இ-ள். மூடா - மூடனே—நமா - நமனே—திமிரையடைந்து - ஆங்காரத்தைப்பொருந்தி—ஆயல் - எனது குற்றங்களை நீவிசாரித்துப் பாராதே—என்முன் - எனக்கெதிரே—அணுகல் - கிட்டிவாராதே—மீள் - மீண்டுபோய்விடு(என்வார்த்தையைக் கேளாமல வந்தால்)—இனும் - இனியொருதரமும்—பெருமானுதைதகு - எமது பெருமானாகிய பழமலைநாத ருதைதகு—தாநமாதி - இடமாகுவை (ஏனெனில்)—மெய்ப்புகழை - உண்மையான பழமலைநாதனது கீர்த்தி

கனை—பாடா - பாடி—நமாதியெழுத்தைந்துமோதி - (வேதங்களிற்சொல்லாநின்ற) நகாரமுதலிய வெழுத்தைந்து முச்சரித்து—பழமலை - முதுகிரியே—வீடாம்- வீடாக—வாழ்-வாழுகின்ற—நமாதி - நமது பரமசிவனது—அடியார் - அடியாராகவும்—அடியருள் - தொண்டுசெய்யு மனமரினத்துள்ளே—மேவினம் - போய்ச்சேர்ந்தோம்—எ-று.

பெருமானுடைக்கு இன்னுந்தானமாதிமீளுதி யென்மு ரணனுகல் திமினாய்டைந்தாயல் நமாஅடா - எனச் சிங்க ாக்குப் பொருள்கோளாக்கிக்கொள்க. ஆதியென்பது - சி னுகவொருபெயர். உதைகசின்னுந்தானமாதியெனவே - எ ர்னிடத்தி னீவந்தாலென வருவித்துரைக்கப்பட்டது. இது நியமனைப்பழித்தல். (அக)

மேவத்தகனா யிவர்மகவீன்றதொல் வெற்பரசனே
சேவத்தகனா வொடுபூசித்துன்னைவிண் செல்வமுறும்
பூவத்தகனா நகுவேமெமக்குநின் பொங்கருளா
லோவத்தகனா வகைப்பாசமுந்தம் முரங்குலைத்தே.

இ-ள். மேவ - பொருந்த—தகனா - (நாரதர்புரிந்த யாகத்திற்றோன்றி யுலகத்தை யழிக்கத்தொடங்கின) வாட்டுக்கடாவை—இவர் - ஏறிய—மகவு - சுப்பிரமணியனா—ஈன்ற - பெற்ற—தொல்வெற்பரச - பழமலைக்கிறைவனே—சேவு - இடபத்தையுடைய—அத்த - அப்பனே—கனாவொடு - மனக்கனிவோடு—பூசித்துன்னை - உன்னையருச்சனைசெய்து

—வின்செல்வமுறும் - சொர்க்காதிபோகத்தை யுடையும்—பூ - பூமியிலுள்ள—வத்தகளை - கருமகாண்டிகளை—நகுவேம் - நாமிகழ்ந்து பரியாசஞ்செய்து சிரிப்பேம்—எமக்கு - எங்களுக்கு—நின - உன்னுடைய—பொங்கருளால - மிகுந்த இருபாநோக்க வீக்ஷண்ணியத்திஞலே—தகர் - சின்ஞபின்னபபட்டு—ஐவகைபபாசமும - பஞ்சமலங்களும்—தமமுராங்குலத்தே - தமது வலியழிந்து—ஒவ - ஒழிந்துபோமாயின்—எ-று.

வீட்டையடைதறகுத் தடையான பஞ்சமலங்களும் தமதுவலிகெட்டுத் தகாநதுநின் பொங்கருளா லொழியுமபடி நீசெய்யில் பூவத்தகளையாம் நகுவேமெனககூட்டுக. விண்செல்வமுறறும பூவத்தகளை நகுவேமென்பதற்கு விணணிற்பொலியுந தேவபோகத்துககுரிகரான மிகுநதசெல்வத்தைப பூமியிலேயனுபவித்துத் தமதான்மாாத்த பூசையைவிட்டுக் கூலிக்குப பராாத்தங்களிற் பூசித்துததிரியுந் தேவருலகளைபபாாத்து இகழநது சிரிபபோமெனினுமமையும். (அஉ)

குலையாநிலமும் விசும்புந்தொழுமுது குன்றமதிக்
கலையாநிலமும் மடியழல்காயவக காய்கனலின்
மலையாநிலமு முடன்கூடவேமெனே வாங்குகழைச்
சிலையாநிலமு மெமதில்லமாய்நின்று சீறுவனே

இ-ள். குலையா - குலைநதுபோகாத—நிலமும - நிலத்திலுள்ளாரும்—விசும்பும - விண்ணிலுள்ளாரும்—தொழுமு

துகுன்ற - வணங்கும் பழமலைநாத—மதிககலையாகிலவு - சந்திரகலையாலாகிய பிரகாசம்—மும்மடியழல்காய - அழலினுமூன்றுபங் கதிகமாககாய்ந்துசுட—அககாய்கனலின் - அப்படிக்காய்ந்து வருத்தஞ்செய்யுஞ் (சந்திரபிரகாசத்தினுக்கிணைம்போய்)—மலையாநிலமும்-தென்றலும்—உடன்கூட - அதற்குத்துணையாககூடி யெனனுடலைசசுட—வேம்-(உடலம்) வேகாநின்ற—என்னை - என்னை—வாங்குகழைச்சிலையான்-(அச்சமயத்திற றனதுகருப்புவில்லைவளைத்துப பூவம்பைத்தொடுத் துடலெல்லாஞ் சல்லடைக்கண்போலாகப் பிரயோகித்துத் தனது சாமாத்தியத்தைககாட்டிய) மனமதன்—இலமும்-தன்வீடும்—எமதில்லமாய் - எமதுவீடாககைககொண்டு—நின்று - எதிர்நின்று—சீறுவன் - கோபித்தலைச்செய்கின்ற (னிதற்கென்னசெய்வேன)—எ-று.

குறியதன்கீழாக குறுகலுமென்னும் விதியால நிலாவென்னுஞ் சொல்நிலவெனத் திரிந்தது ஏகாரநதேற்றம். (அரு)

சீறினையாக மதியுறும்பாம்பணி செல்வமறை
மாறினையாக மலிமுதுகுன்ற மருவுதறகுச்
சேறினையாக யிலாசவிலாசசுதேவ வெண்மின்
றேறினையாக நிலையென்றுவாழன்மினை றெண்டர்களே.

இ-ள். சீறினையாக - சிறியவுணவாக, மதியுறும்பாம்பணிசெல்வ-மதியைக்கவர்ந்துதின்னும் பாம்பை யாபரணமாகத்தரித்தசெல்வத்தை யுடைய, மறை - வேதங்களானது,

மாறிரையாக - பெரிய கடற்றிரைபோல, மலி - நிறைந்த, முதுகுன்றம் - இறைகளுருவமான பழமலையினை, மருவுதற்குச்சேறீர் - அடைந்து வசிக்கும்பொருட்டுச் செல்லுவீர (சேர்ந்தவவ்விடத்திலிருக்கும் பிறைதவனை), ஐயா - ஐயனே, கைலாசவிலாச - கைலாயமெனனும் வெள்ளியங்கிரியில் விலாசமாக வெழுந்தருளி யிருப்பவனே, சுதேவ - ஒருகாலுமழிவில்லாத நல்லதேவனே, என்பின - என்றுசோத்திரஞ்செய்பவர்கள், தொலைதிரையாக்கம - தோலுதனாருக்கு திரைவுங்கிழவுருவையுமுடைய சரீரம், நிலையென்றுவாழ்ன்பின் - நிலையையுடையதென்றிந்தவுடம்போடு கூடிவாழும் வாழ்க்கையைச் செய்யனமின், தொண்டாகளே - அவனதடிமையான வனைபாகளே.—எ-று.

முதுகுன்றன் வாக்காதலிற செல்லுமறையென்றார். ஐயா கயிலாசவிலாச சுதேவவென்று தனித்தனி யுரைபயினும கைலையில விலாசமாயிருக்கு நல்ல தேவனே யென்றொரு தொடராக்கி யுரைபயினுமமையும. யாக்கைநிலையன்மையின தனோடுகூடிவாழுநு சிற்றின்பமு நிலையல்லவென்பது தோனறவாழனமினென்று கூறினா. சிறிலா-சீறிக்கோபித்து யினாநாதவெனினு மமையும. (அ௪)

தொண்டனைக்கூடல விழையாரபொழின்மலாக் கணுடைத்த
லை, விணடனைக்கூட லறயுறலபோலுகதொல வெறுப்புறுமைக
சண்டனைக்கூட ஒடையானைபபோறறிலா கறறறியா
பிணடனைக்கூடல வழிபயொடதநுபு வீழ்க்குடமோ.

யாது பொல்லாங்காகிய வைம்பொறியென்னும் வழிநடத்தி விடையகக்குழியிலே தள்ளுவனொன்பது மொன்று. (௮௫)

வீழிவலஞ்சுழி தில்லைசிராப்பளி வேதவனங்
காழிவலஞ்சுழி யின்மேவுகுன்றைக கடவுள்விடி
னாழிவலஞ்சுழி வெள்வளையானணை யனையகல்விப
பாழிவலஞ்சுழி யுந்தியுள்வாங்குவா பாவையரே.

இ-ள். வீழி - திருவீழி, வலஞ்சுழி - திருவலஞ்சுழி, தில்லை - சிதம்பரம், சிராப்பளி - திரிசிரபுரம், வேதவனம்-வேதாரணியம், காழி - சீகாழி, வலம் - திருவலம் (இத்தலங்களிலே), சுழியில் - வளைந்தவீடான கர்ப்பக்கிரகம், மேவும - அவற்றுள் வீற்றிருக்கும், குன்றைக்கடவுள் - பழமலைநாதர், விடின் - விட்டுப்பிரிந்தால், ஆழி - சக்கராயுதமும், வலஞ்சுழி - வலம்புரியாகிய, வெள் - வெள்ளிய, வளையான்- (பாஞ்சசன்னியமென்னும்) சங்கையுமுடைய விஷ்ணுவுக்கு, அணையனைய - மெத்தையாகிய சேடனுக்கு நிகரான, கல்விப்பாழி - கலைக்கியானங்களுடையவலி, வல் - விரைவில், அஞ்சுழி - விரகநோய்க்குப் பயந்தவிடத்தில, உந்தியுள்வாங்குவா - நாபியிலேநடுங்கி மறந்துபோவார்கள், பாவையா - பிரிந்தமடவார்—எ-று.

நாபியிலிருந்து பரா பைசந்தி மத்திமை வைகரியென்று நாலுவாக்கும ஒன்றிலொன்று சகளீகரித்துத் தோன்றி வெளியே புறப்பட்ட நாதகாரியப் பட்டெழுத்தாய சொ

இ-ள். தொண்டரைக்கூடல் - அடியாரைக்கூடி வாழ்தலை, விழையார் - இச்சியாதவர்கள், பொழில் - வானளாவிய பூங்காவுகளை, மலர்த்தாதுறுத்தல்-மகரந்தப்பொடிகூரையுறுத்துதல் (என்பொன்றிருக்கமென்னெல்), விண் - ஆகாயமென்னுநாயகன், தரைக்கு - பூமியென்னு நாயகிக்குமுடனே, ஊடலற - பிணக்கைத்தீர்க்க, உதல்போலும் - அவன்மேல வீசிய கதம்பப்பொடிபோலும் (அழுகைசெய்யாநின்ற சோலைக்குமத), சொலமைநப்பும் - பழமலையினகண் வாசமாயிருக்கும், மைதந்தண்டான்-நீலகண்டன், கூடலுடையார்-கூட்டில்லென்னும் மதுரைபுரியைப் படைசத்தவர், போற்றிலர்-புகழ்ந்தாரில்லை, கற்றறியார் - அவனைத்துப்புகழ்கிய தேவாரம திருவாசகமுதலிய தோத்திரங்களை [illegible] கற்றதிலே வருமிலாபத்தை [illegible] முறியாமறிரியம், மண்டர் - ஆங்காரிகள், நூக்கும் - [illegible] வுடம்பை, உலைப்போட பன்றிகளிலே, நடத்தும் - நடத்துவிக்கும், வீழ்த்துவர் - பிறவியென்னும் படுகுழியிலே தள்ளுவார் - எ-று

இத்துணை [illegible] தொண்டரைக்கூடலறவென [illegible] பிணக்கற உதல்போலும் [illegible] தல [illegible] - [illegible] - [illegible] அன்றி [illegible] பொருந்தும் [illegible]

ல்லாய்க் கவியாய்ப் பிரபந்தங்களாய் சமஸ்தகலைகளு மாதலி ன் அதுவச்சம்வந்த விடத்தி லறிவுகெடுதலின் மூன்னந்தா னுற்பத்தியான நாபித்தானத்திற்றனே லயமாமென்பார் உ ந்தியுள்வாங்குவதென்றார். அனறி வலஞ்சுழி யுந்தியென்பத னை பிரிந்த தலைவன் வருநாளையெண்ணி மடந்தையாகிலத்தி ற் றமது கைவிரலால வலமாகக்கீறிச் சுழித்தலைநடத்தி யெ னபபொருள்செய்து உள்வாங்குவா உள்ளமுங கோணுவ தொன்னினு மமையும. இன்னும் வலஞ்சுழி யுந்தியென்பதனை வலப்பிரதக்ஷிணமாகச் சுழிபொருந்திய நாபித்தானத்தி லொ டுங்கிபபோவதொனினும் பொருநதும் இன்னும் வலஞ்சுழியெ ன்பதறகு நீர்ச்சுழியை வெற்றிகொண்ட வுநதியெனமாறினு மமையும் வலம் வெற்றி சுழி நீர்ச்சுழி எனய பதச்சேதம்ப ண்ணிச் சகலபொருளையுமுட்கொண்ட நீசசுழிபோன றவுந தியெனினுமொககும இன்னும்பாழி வலமென்னு மிரணடை யு மீமிசைசசொல்லாககிக கல்வியினது மிகுந்தவலியையசசுழி த்துககோபித்து உந்தி தள்ளி உள மனத்தில் வாஙகுவர் வை யாமன் மறந்துபோவாரெனினும் பொருந்தும் அன்றிக்கல்வி ப்பாழி கல்வியாகிய மலையை வல் விரைவிலே அம தண்ணீர் சுழி நீர்ச்சுழி உந்தி என்றுகபிபரிவென்னு நீர்ச்சுழிகொண ட வாற்றுவெளளத்தினுளளே விட்டுதாங்குவா விரகமாகிய சுழியிலே சுழலும்படி வளைந்து சுழலப்பணணுவ தொன்பது மொன்று மனஞ்சுழலுதற்கு நீசசுழி யுவமங்கூறியவா றுயி னுமாம். (அகூ)

...ரதி — பதவுரை.

...கொள் பாட்டுடையார்க்கு
...தன்மேது வெற்பினுக்குக்
...று கலங்குகின்ற
...வினை யாயினமையே.

...வலராகிய சுந்தரமூர்த்திக்கு —
...ரவியங்களை பிச்சைப்படிக்கொடு
...ாகக்கொண்ட — பாட்டுடையார்க்கு —
...மலர் - சத்துருக்களை — உட்குப்
...பமான — மழுவார்க்கு — மழுவர்
...ல் - நல்ல — பூ...வெற்பினுக்கு -
...காவலராகிய பர்வதனினுக்கு —
...டாணதியாறு — கலங்குகின்றது —
...னவாச்சரியம் — அலருக்கு — பி
...சொல்லுக்கு — வினைவிலையாயினை -
...வினை — ஆயினமையே - ஆய்ந்தவாட
...கொள் - என - று.

இதனுள் பர்வதவொன்புனைதப ட
அப்பர் சுந்தரர் மாணிக்கவாசக(
...ம் சம்பந்தரப்பரிருவருக்கும் ட
...மாணிக்கவாசகர்க்கும் பரிணயட
...த்து எரியைச் செருதிரையார்க்கில்
வேண்டியவாறெங்கு மாடையி
த்தநிறையும் சுகை. (அ...

ஆயக்கலைய கலுஞ்சீர் முதுகுன் றரசமுனஞ்
சாயக்கலைய னிமிர்த்தசெம்மேனிய தப்பலில்லா
நேயக்கலைய புழுக்கூடெனு முடனேயமெல்லா
மாயக்கலைய மலமாயைகன்மங்கள வந்தருளே.

இ-ள். ஆய - ஆராய்ந்துபார்க்க—கலை - கலைக்கியானங் களைக்கும்—அகலும் - தோன்றுமலப்புறப்படும்—சீர் - புகழினையுடைய—முதுகுன்றரச - பழமலையின்கண்வாழுமரசனே—முனம் - முன்னொருகாலத்தில்—சாய - (திருப்பனந்தாளிற் சிவலிங்கஞ்) சாய்ந்தபோது (சோழராஜன் யானையைக்கட்டியீர்த்து நிமிராததுகண்டு)—கலையனிமிர்த்த - கலையனாயனார் (கழுத்திற்கண்ட கத்திரியைமாட்டி லிங்கத்திற்குங் கண்டகத்திரிக்குங் கயிறுபூட்டியீர்த்து) நிமிர்த்த—செம்மேனிய - செவ்வையாகநின்ற மகாலிங்கவுருவனே—தப்பலில்லா - பொய்படுதலில்லாத—நேய - ஆசையையுடைய—கலைய - கல்லென்னுங் கைலைமலையி லுறையுமையனே—புழுக்கூடெனும் - எமது புழுமலிந்தகூடாகிய—உடனேயமெல்லாம் - தேகாபிமானமெல்லாம்—மாய - கெடவும்—கலைய மலமாயைகன்மங்கள் - ஆணவமாயை கன்மமென்னு மும்மலங்களுங் கலைந்துநீங்கவும்—வந்தருள் - (எம்முள்ளத்து) ளெழுந்தருளவேண்டும்—எ-று.

கலைகளையாய்ந்துபார்க்கினு மவற்றினும் புகலுதற் கருமையான சீராதலின் கலையகலுஞ்சீரென்றார். (அஅ)

வந்திக்கநாவி னினையேவழுத்த மலர்விழியா
முந்திக்கணவி தொலைத்தோய்நினது முதுவெற்பையே
சிந்திக்கநாவி மதநாறுமாதனைச் சேருமின்ப
நந்திக்கனவி னொழிவாமென்றுன்னுற நல்குதியே.

இ-ள். வந்திக்க - உன்னைப்பூசனைபுரியவும், நாவின்-நாவினாலே, நினையேவழுத்த - உன்னையே துதிக்கவும், மலர்விழியால் - செந்தாமரைப்பூப்போன்ற மேனோக்கிச்சிவந்த அக்கினிகண்ணினால், முந்து - முன்னாளிலே, இக்கணவிதொலைத்தோய் - கருப்புவில்லினையுடைய மன்மதனுயிரை யுடலைவிட்டுநீங்கும்படி போக்கினவனே, நினதுமுதுவெற்பையே - உனதுபழமலையையே, சிந்திக்க - நினைக்கவும், நாவிமதநாறும் - மிருகமதங்கமழும், மாதனை - பெண்களை, சேருமின்பம் - கூடியணையுஞ்சிற்றின்பம், நந்தி - குன்றி, கனவின் - கனவைப்போல, ஒழிவாமென்று - பொய்யாயழிந்துபோமென்று, உன்னுற - நினைக்கவும், நல்குதி - (எனக்) கருளுதி—எ-று.

ஏகாரமீற்றசை. (அகூ)

நல்குரவேநல் லுனைதான்முதுகுன்றர்நாட்டினக்குச்
சொல்குரவேநல் குரவுறுவேல தொண்டகள்பல
மல்குரவேனவி தன்விட்டகம்புக்க மானையிந்த
வொல்குரவேனல் விடைக்கொடுபோகவென் றேதிலையே.

இ-ள். குரவே - குரவென்னும் பெயரையுடைய மர மே—முதுகுன்றர்நாட்டு - பழமலைநாதருதேயத்தில்—நல் லுரைதான் - நல்லவசனமும்—நல்குரவே - உனக்குத்தரித் திரமோ—சொல் - நீசொல்லுவாயாக—நல் - நல்ல—குரவு று - குராமாலையைப்புனைந்த—வேல - தலைவனை—தொடை கள் - தொடுத்துக்கட்டப்பட்ட கட்டுகள்—பலமல்கு- பலவ ற்றைப்பொருந்திய—உர - வலிபெற்ற—ஏனலிதண்விட்டு- தினைப்புனத்திவிட்டுவைத்த பரண்விட்டு—அகம்புக்க - எம துவீட்டில் வந்திருந்த—மானே - மான்போன்ற கண்களையு டைய வெமது புதல்வியை—இந்தவொல்குரவேன் - இப்படி ப்பட்ட விழிதொழிலேன் (மகராசனாகிய வுனக்கு)—அல்லி டைக்கொடுபோகலென்று - இவ்விராத்திரிகாலத்திற் றிருட் டுத்தனமாகக் கொண்டுபோகாதேயென்று—ஒதிலை - சொல் லினுயில்லை—எ-று.

இதுநற்றாய் குரவொடு புலம்பல் வேலவிதண் விட்டக ம்புக்க மானையிந்தவொல்குரவேனல் லிடைகொடுபோகலெ ன்றோதிலை முதுகுன்றர் நாட்டுனக்கு நல்லுரைதானல்குர வேயெனக்கூட்டுக. (கூ0)

ஒதித்திருக்கு மொழிவதல்லாமலுன் னுண்மையிலை
சாதித்திருக்கு மியல்புதந்தாயிலை தன்மையெலாம்
போதித்திருக்கு மொழிகுன்றைவாண பொருப்புதவுஞ்
சோதித்திருக்கு மரிபாகசுந்தரன் றாதுவனே.

இ-ள். ஒதித்திருக்கு — சகலநூலையும் வாசித்திருக்கு (மனற்றல்விளங்கிய வறிவுமறியும் பொருளாககாணூர திருசியமும்)—ஒழிவதல்லாமல் - லயத்தாலன்றி யுண்டாகாத— உன - உனது—உண்மைநிலை- மெய்மையாயழியாது நிலையாய்நிற்கு (மத்துவித மோக்ஷமான விரண்டறு கலபபை)—சாதித்து - சாதனைபண்ணி நிட்டைகூடி—இருக்குமியல்பு - சமர்தியிலிருக்கும் சுபாவத்தை—தந்தாயிலை - அடியேனுக் கருளினாயில்லை—தன்மையெல்லாம் - உனது மகத்துவங்களையெல்லாம—போதித்து - (அரிபிரமர் முன்னொருகாலத்தொருவாக்கொருவா கலாபமுறறுத் தாங்களே பிரமமென்று சண்டையிட வப்போதே யவரெதிரேநின்று நாம் பிரமமல்லமுதுகுன்றரோ யழியாத பிரமமென்றவர்கண் மயக்கந்தீர) போதித்து—இருக்கு - வேதமானது—மொழி வணங்கித் துதிக்கும்—குழைவானை - பழமலைநாதனே—பொருப்புதவும் - இமயகிரியளித்த—சோதித்திருக்குமரிபாக - பிரகாசிக்கு மெழிலையுடைய வுமையவள் பங்கனே—சுந்தரன்றூதுவனே - சுந்தரமூர்த்தி நாயனருக்குத் தூதாகச் சென்றவனே—எ-று.

திருக்குமென்னு மெச்சவும்மையாற் றிருசியமு மொழிவதல்லாமலென்று கூறப்பட்டது. இவையிரண்டு மொழிந்தவிடங்காண்பானுங் காட்சியுமற்றவிட மென்பதாயிற்று. இஃது முத்திமுடிவினிலை கூறியது. (கூக)

தாதுகண் டாலு மதியணிவேணியர் துன்னிவந்தென்
காதுகண் டாலு முடன்மூக்கின்பெய்த நல்காரெனவெம்
மாதுகண் டாலு முவக்கப்படுமொழி வந்தனள்கார்ப
போதுகண் டாலு மயிலவாழ்பொழிற் பழம்பூதரனே.

இ-ள். தாதுகண்டாலும் - (நானுப்பிய) தூதுவனைக்கண்டனராயினும்—மதியணிவேணியர் - மூன்றாம்பிறையைத்தரித்த சடையினையுடையவர்—துன்னிவந்து - என்னிடத்துநெருங்கிவந்து—காதுகண்டாலுமுடனமூக்கு - காதுங்கண்ணும் நாவுமுடலும் மூக்குமாகியவைம்பொறிகளும்—இன்பெய்த - கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறிதலென்னும் ஐவகையின்பமுமடைய—நல்கார் - போகமாகிய கிரீடையைக் கொடுக்கமாட்டார்—என - இப்படியென்றறிந்து—எமமாது - எமது பெண்ணானவள்—கண்டாலும் - கறகண்டினும்—உவக்கப்படுமொழி - விரும்பப்படுமதுரமான வசனத்தையுடையவள்—வந்தனள் - (இராவிற்குறியிடை யீடுபட்டு விடியற்காலையில்வீடுவந்து) சோர்ந்தனள்—கார்பபோதுகண்டு - கார்காலத்தைக்கண்டு—ஆலும் - மகிழ்ந்துகூத்தாடும்—மயில்வாழ்பொழில் - மஞ்ஞைகள்வாழ்ந்திருக்கும் பூஞ்சோலைசூழ்ந்த—பழம்பூதரனே - முதுகிரிநாதனே—எ-று.

தூதுகண்டாலுமென்னு மிறந்ததுதழீஇய வெச்சவும்மையாலென்னதுகுறைகளையெல்லா முரைத்தாலுமென வருவித்துக் கண்டாலுமுரைத்தாலு மின்பமெய்தநல்காவேணி

யொன்று எம்மாதுநீசொன்ன விரவுக்குறியி னிவருவாயெ ன்று விடியற்காலையளவும் விழித்திருக்கெமது வீட்டில்வந் தாளெனக்கூட்டுக. இஃதிரவுக்குறி பிழைத்தமையிறைவற் கிறுளையுரைத்தல். (கூஉ)

பூதரநன்று சிலைகளென்றுகொள்ளும் புராந்தகனார்
சீதரனன்று பொழிலெனுங்குன்றைத் திருநகரார்
காதரனன்றும விழிபெறுமாறுடைக கண்ணுதலார்
மாதரனன்று வருமதிககோய்தலை மாற்றிலரோ.

இ-ள். பூதரம் - மேருகிரி—சிலைக்குநன்றென்று - நம து வில்லாதற்கு நன்மையை யுடையதென்று நினைத்து— கொள்ளும் - வளைதறுக கையிற்பிடித்துககொள்ளும்—புரா ந்தகனா - திரிபுரதகனர்—சீதரன் - மாயவன்—அன்று - அ லல—பொழிலெனும் - (ஆகாயமுட்டவளர்ந்த பூஞ்சோலை யென்னுக) சோலைசூழ்ந்த—குன்றைத்திருநகரார் - பழம லையென்னுந் திருநாமம்பெற்ற தலத்தையுடையவர்—காதர ன் - தீவினைததொடர்பை யுடையனான—அன்றும் - கேவல த்திற்கிடந்து வந்தநாளினும்—விழிபெறுமாறுடை - தன்ன ருளேக்கம பெறுய்யவேணடுமெனனுங் காருண்ணியத் தைவைத்து மாயையுங் கனமமுங்கொடுத்துச சகலத்தில்த னுகரணபுவனபோகங்களில் விடுத்துநாயேனை யடிமையாக வுடைய—கண்ணுதலார் - பாலநேத்திரத்தையுடையவர்— மாதர் - (தன்மேன்மோகித்த விதமெருவிலுள்ள) பெண்க

ள்—அன்று - அழலாய்க்கொதித்து—வருமதிக்கு - உதய மாகிவந்து சுடாநின்றசந்திரனுக்கு—ஓய்தலை - உணர்வழிந்து வாடுந்துன்பத்தை—மாறறிலர் நீக்காதிருந்தனர்—எ-று.

இஃது பவனிகண்டமடந்தையர் மால்கொண்டு சந்திரகிரணத்துக்கு வருந்தியுரைத்தது. (௯௩)

மாற்குச்சிவந்த மலர்த்தாண் முதுகிரி வாணன்மறை
நூற்குச்சிவந்த விராப்பொருளென்பவர் நோகருளன்வேள்
கோற்குச்சிவந்த விறலாளனின்னுங் குறுகிலனிம்
மேற்குச்சிவந்த தறியேனிவட்கு விளைவதுவே.

இ-ள். மாறகு - மாலானவனுக்கு—உச்சிவந்த - முடியிற்றரிக்கும்படி கிடைத்த—மலர்த்தாள் - மலர்போன்றபாதங்களையுடைய—முதுகிரிவாணன் - பழமலையின்கணவாழுகின்றவன—மறைநூற்கு - வேதநூலுக்கு—சிவம் - சிவமே—தவிராபபொருளென்பவர் - நீங்காத பொருளென்றுசொல்லும் (ஞானிகளது)—நோகருளன்-காட்சிகெளியனாயிருக்கின்றவன்—வேள் - மன்மதனெய்த—கோற்கு - மலரம்புக்கு—சிவந்த - கோபித்த—விறலாளன் - செயத்தையுடையவன்—இன்னுங்குறுகிலன் - இதுகாறும்வநதானில்லை—இ - இந்த—மேறகு - குடதிசை—சிவந்தது - (மாலையிற்) செவ்வானமாயிற்று—இவட்கு, - இந்தப் பெண்ணுக்கு—விளைவது - உண்டாகுந்துன்பங்களை—அறியேன் - யானறிந்தேனில்லை—எ-று.

இஃது மாலையம்பொழுதுகண்டு நற்றாயிரங்கல். ஏகார மீற்றசை. (௯௪)

விளையவளையு மணிநெல்வயன்முது வெற்பிறைவ
னளையவளையு முறவுடையானவ் வனங்கசிலை
வளையவளையு முடையுந்துறந்து வருந்துறுமிவ்
விளையவளையு மொருபுடைசார விருத்திலனே.

இ-ள். மணி - மணிபிடித்து—நெல்விளைய - நெல்விளையும்படி—வயல் - வயல்கள்—வளையும் - சூழும—முதுவெற்பிறைவன் - பழமலைகாசன்—அளையவளையுமுறவுடையான் - கலந்துறவாடத் தானுங் கலந்துறவாடு மனபுடையவன—அ - அந்த— அனங்கசிலைவளைய - மன்மதன்கையில் வளையுந்தோறும்—வளையும் - கைவளையும்—உடையும்- ஆடையுமாகிய விவைகளை—துறந்து - நீங்கி—வருந்துறும்-வருத்தபபடும்—இவ்விளையவளையும் - இந்தச் சிறியபேதைப் பருவப்பெண்ணையும்—ஒருபுடைசாரவிருத்திலன் - தனதொருபக்கத்திலிருக்கவைத்தானில்லை.—எ-று.

இதுவு நற்றாய் புலம்பல். (௯௫)

இருந்தவிருப்ப திடத்திலல்லாம லிருப்பலெனு
நிருத்தவிருபப முதுகுன்றவாணனை நீவலியுஞ
செருத்தவிருபப வுததியையாருணச சிந்தைசெய்வா
திருத்தவிருபய வலையாவாமெல்லுவர் தேமொழியே.

இ-ள். இருத்த - நீயிருத்திவைக்க—இருப்பது.- நானி ருந்துவாழ்வது—இடத்திலல்லாமல் - இடபபாகத்தி லல்லா மல் (மற்றொருதானங்களில்)—இருப்பலெனும் - இருந்து வாழ்வனோ வென்றுநீகூறும்—நிருத்தவிருபபமுதுகுன்றவா ணனை - நடனத்திலாசையை யுடைய பழமலைநாதனை—நீவ லியுஞ்செருக்கவிர் - நீபலாத்காரஞ்செய்து வாதாடுஞ சண் டையை விட்டுவிடு—உப்பவுததியை - உவர்மயமான சமுத் திர நீரையெல்லாம்—யாருணச்சிந்தைசெயவா - குடிபபோ மென்றி யார் நினைபபார—திருத்த - திருத்தமாகச்செய்த— இருப்பவலை-இரும்பினுறையவலெ்லனுஞ் சிற்றுணடியை— யாவர்மெல்லுவர் - எவர்தாமென்று தின்னும் வலலமையு டையார்—தேமொழியே - தேன்போன்ற சொல்லினையுடை யாய்—எ-று.

குறுமுனியன்றி மற்றொருவருக்குங் கடலைக்குடிக்க வ ருமோ வதுபோல வுமையவளுக்கன்றி மற்றொருவருக்கு மி டப்புறங்கிட்டுமோ பேதையே நீபழமலைநாதரோடு வாதாடு தல் விருதாவாயிற்று இந்தவாதைவிட்டு விடென்பதாம்இது வுநற்றாயிரங்குதலிற்பேதம். (௯௬)

தேவியுமானும் விளையாடிடமுடைச் செங்கணுத
லாவியுமானும் வருஞ்சீர்முதுகுன் றணிவிழவைக்
காவியுமானும் விழியாய்கண்டெய்தெனக் கண்மறுவி
னேவியுமானும் மகட்கிடர்நீர்செய்தி ரேழையரே.

உமையிடப்பாக னலங்கூர்முதுகுன் றுடையனராச்
சுமையிடப்பாக வரிதேடடியுறத் தூமலர்க
டமையிடப்பாக மருவுவரோலவர் தங்களைப்பா
ரமையிடப்பாக னணுகானுதைதநினைந் தஞ்சுவனே.

இ-ள். உமையிடப்பாகனலங்கூர்முதுகுன றுடையன் - பார்வதியிடப்பாகத்தி னலமாகவாழ்தலையடைந்து மகிழ்சிறந்தபழமலையை யிடமாகவுடையவன்—அராச்சுமை - ஆதிசேஷனுகிய வரவிற்குச்சுமையாகிய பூவுலகத்தை—இடப்பாக - இடந்துமூக்கினு லுழுதுபிளந்து—அரிதேடு - (வராகவுருவாகித்) திருமாறேடிய—அடியுற - பாதாரவிந்தத்திற் பொருந்த— தூமலர்கடமையிட-பரிசுத்தமான பூககளையருச்சிக்கும்படி—பாகமருவுவரோல் - பரிபக்குவத்தை யடைவாகளேயாகில்—அவர் தங்களை - அந்த மலபரிபாகரை—பாரமையிடபபாகன் - சுமக்கப்பட்ட வெருமைக்கடாவேறும் ராவுத்தனுகிய சமன்—அணுகான் - பிடிக்கும்படி கிட்டவரமாட்டான்—உதைதநினைந்தஞ்சுவனே - முன்னுதைத்த உதையை நினைத்துக்கொண்டு பயந்தோடிப்போவன்—எ-று. (கூ௮)

அஞ்சுவண்ணத்தை வரன்முறையோத வரக்கெறிந்த
பஞ்சுவணத்தை மருவுமென்றூளுமை பாகமொடு
செஞ்சுவணத்தை யனையகின்கோலமென் சிந்தையுற
விஞ்சுவணத்தை மகிழ்குன்றைவாண விரும்புவனே.

இ-ள். அஞ்சுவணத்தை - ஐந்தென்று வேதாகமங்களி லெடுத்தோதாநின்ற வன்னமாகியவெழுத்தை—வான்மு றையோத - வரிசைக்கிரமமாகக் குருவினருளா லுபதேசம் பெற்று நாவினாலுச்சரிக்க—அரக்கெறிந்த - சிவந்தநிறத்தை வீசாநின்ற—பஞ்சு - செம்பஞ்சினுடைய—வணத்தைமருவு ம் - நிறத்தைப்பொருந்திய—மென் - மிருதுவான—தாள- பாதத்தையுடைய—உம்பரகமொடு - உமாதேவியை யிடப் பாகத்தில்வைத்தகோலத்துடனே—செம் - சிவந்த—சுவண த்தையனைய - பொன்னையொப்பாகிய—நின்கோலம் - நின் னுடையவழகு—என்சிந்தையுற - எனதுமனதிலே யிடைவி டாதுதியானிக்க—விஞ்சு - பறவைகளுக்கெல்லா மதிகவலி மையையுடைய—உவணத்து - புள்ளரசனுக்கு—ஐ - சுவா மியான திருமாலானவன—மகிழ் - மகிழ்ந்துபூசித்த—முன றைவாண - பழமலையின்கண் வாழ்கின்றவனே—விரும்பு ன - ஆசைப்படுவேன்—எ-று.

சுவர்ணமென்னும் வடபதம் - சுவணமெனத் திரிந் தது. (௯௯)

விருத்தாசலாசங் கராமலைமாது விழிகளிக்கு
நிருத்தாசலசுந் திரன்போலுடம்பிலடை நினறவர்தங்
கருத்தாசலசம் பவமிலாக்காண்டறங் காட்டியசொற
றிருத்தாசலசந் தமியேன்றலைக்குன் றிருவடியே.

இ-ள். விருத்தாசலாசங்கரா - பழமலைவடிவானவனே சங்கரனே—மலைமாதுவிழிகளிகருநிருத்தா - மலைமகளாகிய வுமையினது விழிகளிகரும்படி நிர்த்தனஞ்செய்தவனே—ச லசந்திரன்போல் - சலத்திற்றோன்றுஞ் சந்திரன்போல—உ டம்பிடைநின்று - சகலதேகங்களிலு மான்மரூபமாகப் பிரதி பலித்துநின்று—அவர் தங்கருத்தா- அவரதிறைவனே—சல- பொய்யான மாயையினது—சம்பவந் - தொடர்ச்சியை—இ லர்க்கு - விட்டுநீங்கின ஞானிகளுக்கு—ஆணெ - அந்த மல பரிபாக சமயததில்—அறங்காட்டிய - தருமரூபமாகிய தெ க்ஷிணாமூர்த்தி சொரூபமா யெழுந்தருளிவந்து காண்பிக்கப் பட்டநீயே—சொல் - நானெனனுஞ்சொல்லை—திருத்தா - திருத்தி (யழியாபபதவியாகிய சாயுச்சியத்தில் வைத்தவ னே)—சலசம் - தாமரைமலர்—தமியேன்றலைக்கு - அடியே ன்சென்னிக்குத் தரிகருந்தன்மையது—உன்றிருவடி - உன தழகிய பாதாரவிந்தங்கள்—எ-று.

தமியேன்றலைக்குச் சலசமுன்றிருவடியே யெனக்கூட் டுக. ஏகாரந்தேற்றம் கடசலத்திற்றோன்றுஞ் சந்திரவிம்பத் துக்கு உடம்பிலான்மரூபமாப் பிரதிவிம்பித் திருந்ததென்று வேதாந்தநூல்களிலு வமைகூறுதலால், சலசந்திரன்போ லு டம்பிடைநின்றெனறும். அவர் தங்கருத்தாவென்றது. அந் த சீவான்மாககளுக்குச் சாக்ஷியெனபபொருள்பட்டு அந்த கடசலபிரதி விம்பத்துக்குச் சாக்ஷியாகிய காயத்திவிளங்

குஞ் சந்திரனைப்போல வென்பதுவும். அறிவித்தற் கெனக்கொள்க. (௱)

பழமலையந்தாதியுரை

முற்றிற்று.

சிற்றறிவானுயினேன் செய்யும்பொழிப்புரையு
முற்றறிவினுர்புலவர் முன்னணுகுஞ்—சற்றறிவு
மில்லாமகவினிருங்கு தலைச்சொல்லையுவந்
தெல்லாருங்கொள்வா ரினிது.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சென்னைச் சிதம்பராலய

கற்பகவிநாயகர் ஸ்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

சீராருஞ் சென்னைச் சிதம்பரமெ னுந்தளிவாழ்
காராருங் கற்பகவி நாயகனே-யோரார்நின்
ஸ்தோத்திரப்பாச் சொல்லத் துணையா யிருந்தென் [றுங்
காத்தருள னிற்கே கடன்.

ஆசிரிய விருத்தம்.

சந்த்ரசேகரஜடில விமலகுடிலாகார
சத்வகஜவத்திரசதுர்த்
தசபுவனகாருண்ய நேத்ரத்ரியாம்புஜா
தவஜொலிதகுண்டலக
தந்தசததளபங்க ஜாக்ஷபீதாம்பரமா
தவகாம்யசித்ரசக்ர
தானசங்க்ராமபா சாங்குசதராஸ்தபஞ்
சகயுகளசரணகமல
மந்த்ரநாயகமூல பீஜவர்த்துலாகார
மாதந்த்ரயந்த்ரபீட
மத்யத்ரிகோணதள பங்கஜைகாட்சர
மத்வஜாநித்ய விபவ

கந்தசோதரவெனக் கருதுமெய்யன்பருள்வை
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே. (1)

பூமாதுகந்தநெடு மால்சக்கரப்படைப்
புநிதநீயுமிழெச்சிலம்
போருகன்வயப்படைத் திறனவனைநின்னிளவல்
பூட்டுசிறைகாட்டுமமரர்
கோமான்கைவச்சிரப் படையொருவனென்பதைக்
கொஞ்சமுநினைத்தல்சைவக்
கொள்கையலவாதலா லெனதாணவப்பெருங்
கொடுங்குன்றைநூறவேறு
சாமானியப்படைகளாலுமுடியாதிதே
சமையநீகைவிடாம
தயைகூர்ந்துகயமுகத் தவுணனைக்கொன்றுகைத்
தலமேவுகூர்ங்கோட்டினாற்
காமாதியாத்துணைவ ருடன்மடியவீட்டியருள்
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே. (2)

பொருளிலாவறிஞரொரு காற்பூப்பருளிலார்
பூத்தலரிதென்றெடுத்துப்
பொதுமறைமுழக்குபறை கேட்டுமறிவின்றியே
பொன்னென்றுமணிகளென்றும்

மருளுற்றழுங்குமட நெஞ்சமேபொன்னையும்
மணியையும்பேருளையும்
வழங்குசிந்தாமணிய தொன்றுள்ளதைநாடில்
வறுமையோடிருமைவினையும்
உருவிலாதோடுமோ தவினதனைநாடுவா
யோதுமம்மணியாதெனில்
ஓங்காரமானமணி யுபநிடத்துச்சிதனி
லோங்[illegible]க்கண்ணுடைமணி
கருவிகாண[illegible]ளாற் றெளபடாமணியெழிற்
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே (3)

அஞ்சாதகம்பிரம மென்றுட்செருக்கியுன
தன்பரையிகழ்ந்தஜனகன்
அகந்தையறவலிதினவ னிடமந்தணப்படிவ
மாயணைந்தருள்சுரந்து
பஞ்சாக்கரத்தடைவின் முப்பொருட்டிறனும்
பகர்ந்தடிமைகொண்டதென்கொல்
பதியுண்டுபசுவுண்டு பாசமுண்டருளுண்டு
பத்திவழிபாடுமுண்டு
நெஞ்சாரவிதிவிலக் குண்டாகமச்சுருதி
நெறியுண்டுநீயுண்டெடு
நினைந்துதொழுவேற்கருள் சுரந்திடாதென்கொனடு
நிலையெனக்கருள்புரிகுவாய்

கஞ்சாதனத்துமடமாதரிருவருமேவு
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே (4)

சோமகாந்தன்கிருத வீர்யன்கிருச்சமதன்
சூரசேனன்கர்த்தமன்
சுரரிராவணனிந்த்ர னங்காரகன்புரு
சுண்டிஜனகன்வியாதன்
பூமன்பிரத்தியும னன்கார்த்தவீரியன்
புருகூதன்பரசிராமன்
புரவலனுருக்குமாங் கதனறுமுகன்றிரி
புரனகத்தியனொடுபாங்
தாமனுதியர்பூண்ட வுள்ளன்பெனக்குநீ
தந்தருள்வையலதுநினது
சரணமறவாதமுற் கலமுநிகடாட்சவீட்
சணமேனுமெய்தவருள்வாய்
காமருவிணுடரிரு கையேற்பவவிநல்கு
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர் மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே (5)

சரியைகிரியாயோக ஞானத்தினுன்முத்தி
சாதனமுறுதகொடியேன்
சந்ததமுநினதன்பர் திருவடித்தொண்டினிற்
சார்ந்துநில்லாதகொடியேன்

பிரியமொடுவேதாக மக்களைகளோதுநெறி
பிறழ்வுற்றலைந்தகொடியேன்
பெரியோர்களைக்கண் டெழாதகொடியேனறப்
பெற்றிமைமறந்தகொடியேன்
திரிபதார்த்தப்பெருமை தேர்ந்திடாக்கொடியன்வெந்
திவினையுளுற்றுகொடியேன்
திகழுநின்னுபயபத மேதொழாக்கொடியன்மேற்
றிருவருள்சுரப்பதென்றோ
கரியமாமுகி லுலவுமணி மாடமோங்குறுங்
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே. (6)

தண்டகவனத்தில்வளர் விப்பிரதனுனவன
சாருறலைத்தெவனையுந்
தனதுகைவாளாற் றுணித்துவருநாணினது
சாணகமலத்தைநெஞ்சிற்
கொண்டமுற்கலமுநிவ னருளினூற்றுன்செய்த
கொடுவினையைமாய்த்துசாந்த
குணமேருவன்று னுறைப்படியுலர்ந்தவொரு
கோட்டைத்தளிர்க்கவைத்திம்
மண்டலத்திம்மையே நினதுசாரூபநிலை
மருவிபருகண்டியெனவே
வாழ்ந்தமையுணர்ந்துநின் மலரடிவணங்காத
மடமையேற்கருள் புரிவையோ

கண்டகண்ணிமையா தாம்பையர்களுக்குறுங்
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பககணேசமணியே. (7)

மன்னுயிர்கள்யாவையுந் தன்னுயிரெனக்கருது
மாதவம்பெறவும்வந்து
வாய்திறந்தேற்பவர்க் கிலையெனாதுதவவும்
வனசமலர்மாதருளவும்
பன்னுகூழேனுஞ்சி வார்ப்பிதஞ்செய்திவண்
பலரோடிருந்துண்ணவும்
பஞ்சாக்கரத்யான மறவாதுசெய்யவும்
பலகலைகள்முற்றுணரவும்
என்னுடற்கிடரொய்தி னேடணையுண்மூழ்காது
னினையடிதியானிக்கவும்
எதிர்த்தவர்க்குந்தீங்கியற்றுதிருந்திடவு
மீடிலாவரமீகுவாய்
கன்னல்கமுகென்னசெந் நெல்கன்னலெனவோங்கு
'கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பக கணேசமணியே. (8)

பொன்னாசையென்கின்ற பேய்பிடித்தாட்டவும்
புவியாசையென்னும்வேங்கைப்
புலிவந்தடிக்கவும் பூவையர்களாசையாம்
புகர்முகமதக்களிறுடன்

றென்னுகமேசிதற வொருபாற்கிழிக்கவு
மிலக்காகிநின்றதல்லால்
என்னையான்கண்டபல னென்றுமிலையையனே
யினியாவதருள்சுரந்து
பன்னுளுமிப்படிப் பண்ணுமலேமுகம்
பார்க்கினின்னுக்கமெல்லாம்
பாழாகுமோவொருக் காலுமாகாதென்மேற்
பட்சமுற்றருள்புரிகுவாய்
கன்னுகமுண்ணக் கரும்பருள்பான்புதல்வ
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பககணேசமணியே (9)

சீர்கொண்டவேதாக மங்களோங்கப்பெரியர்
செப்புமுப்பொருளுமோங்கத்
தெய்வநீறக்கமணியு டனேந்தெழுத்தோங்க
சிவபிரானைந்தொழில்கள்செய்
ஏர்கொண்டகனகசபை யோங்கவச்சபையினி
லிருந்துநடனங்காணுமாறுடம்
எம்மன்னைசிவகாம வல்லியிணையடியோங்க
வெழிற்புலியுமரவுமோங்க
பேர்கொண்டிலங்குமச் சபைசென்னைவயிரோங்க
பெரிதுமுயல்கங்காகுலன்
பேசரியகாஞ்சிநகர் வாழ்வெங்கடேசமால்
பெட்புநிறைவேறியோங்க

கார்கொண்டகூந்தல்வல் லபையோடும்வந்தருள்செய்
கனமருவுசென்னைநகர்வாழ்
கற்பமலர்மாலையணி யற்பின்முகிலூர்திபணி
கற்பககணேசமணியே.

கற்பகவிநாயகர் தோத்திரம் (10)

முற்றிற்று.

குஞ் சந்திரனைப்போல .வென்பதுவும். அறிவித்தற் கெனக் கொள்க. (௩)

பழமலையந்தாதியுரை

முற்றிற்று.

சிற்றறிவாளுயினேன் செய்யும்பொழிபபுரையு
முற்றறிவினார்புலவர் முன்னணுகுஞ்—சற்றறிவு
மில்லாமகவினிருங்கு தலைச்சொல்லையுவந்
தெல்லாருங்கொள்வா ரினிது.